சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 8	இதழ்: 1	ஜூன் - 2026	விலை - ரூ.20/-
VOL: 8	ISSUE: 1	JUNE - 2026	Rs. 20/-



சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் வழங்கும்

"சாய் சங்கமம்"

12.7.2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணியில் இருந்து மதியம் 2 மணிவரை

சாயி பஜன், குத்துவிளக்கு பூஜை, ஜோதி தியானம், பிரார்த்தனை, ஹோமம், அன்னதானம், சத்சங்கம்



இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை.
இம்மாத மாபெரும் ஹோமம்

ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமம்

(செல்வம் பெருதல், வியாபார வளர்ச்சி, கடன் தொல்லைகள் நீங்குதல், நிலையான செல்வ வளம்,)

ஹோம காணிக்கை: ரூ.500/-
(நபர் ஒருவருக்கு)

குறிப்பு: ஹோமத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ஹோமப் பொருட்கள் அன்னதானத்திற்கு காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் விபரங்களுக்கு :

திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம்
போன்: 63851 29372

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-8 மலர்-1 ஜூன்-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

வாழ்க்கையில் தடுமாறி விழுந்தவனுக்கு ஆறுதல் கூறா விட்டாலும் பரவாயில்லை, அவமானப் படுத்தக்கூடாது. இதை உங்களுக்கு யாரும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. நீங்கள் யாருக்கும் செய்துவிடாதீர்கள்.

சூழ்நிலை உங்களை பதற்றப்பட வைக்கிறதா, இல்லை உங்களுக்கேற்படும் சூழ்நிலையை நீங்கள் பதற்றப்படாமல் கையாளுகிறீர்களா என்பதை பொறுத்தே உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்கும்.

பிறப்பில் இருந்து இறப்பு வரை துன்பமே இல்லாமல் வாழ்ந்தவர் உலகினில் யாரும் இல்லை. ஒரு கட்டம் அப்படி என்றால் மறுகட்டம் இப்படி. ஏற்றம் என்பது இறைவன் தரும் பரிசாக இருந்தால், இறக்கம் என்பது கர்ம வினைக்கு தீர்வாகத்தானே இருக்க முடியும்!

புத்திசாலித்தனமாக பேசுபவர்கள் இவ்வுலகினில் மிகவும் குறைவு. புத்திசாலி என்று தன்னைத்தானே நினைத்து கொண்டு பேசுபவர்கள் தான் இங்கு அதிகம். எனவே பேச்சில் புத்திசாலித்தனம் இருந்து பயனில்லை. செயலில் புத்திசாலித்தனம் வேண்டும்.

சுய அறிவு இல்லாதவனுக்கு மரியாதை கிடைக்கலாம். ஆனால் அது நிலைக்காது. தகுதியும் திறமையும் உள்ளவருக்கு கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் குறையாது. இந்த அறிவுரைகளை ஒருபோதும் மறக்காமல் பின்பற்று. நீ என் பக்தன். உன்னை ஒரு போதும் தாழ்ந்து போக விடமாட்டேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் பேரருளால் தொண்ணூற்று ஐந்தாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில், மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 10 மணிக்கு செல்வி. அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோர் ஆத்மஞான பாடலை பாட விழா இனிதே துவங்கியது. அதைத்தொடர்ந்து ஆசிரியரும், குருவுமான திரு. ஸ்ரீராம் பாபா அவர்களின் சத்சங்கமும் அதைத் தொடர்ந்து புத்தக வெளியீடும் நடைபெற்றது.

இம்மாத இதழை பழம்பெரும் சாய் பக்தர் கொளத்தூர் திரு.ஆறுமுகம் சாய்ராம் அவர்கள்



வெளியிட, திரு. கோபால் சாய்ராம் அவர்களும், திரு. உதி மூர்த்தி சாய்ராம் அவர்களும் இணைந்து பெற்றுக்கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில், "பாராயணப் பகலவன்" திரு. சுந்தர்சாய், திருமதி. ஜெயந்தி, திருமதி. மாதங்கி, திருமதி. இந்துமதி, திருமதி. லதா, ஆகியோர் தங்களது அனுபவங் களை பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து ஆத்ம ஞானியர் குழுவினர் குருவிற்கு மரியாதை செய்து குரு காணிக்கை வழங்கினர். பழம்பெரும் சாயி பக்தை திருமதி. சரோஜா அவர் களும், அவர்களது புதல்வர் திரு.இராஜகோபாலன் ஆகி யோரும் இணைந்து குருவிற்கு புட்டபர்த்தி சத்யசாய் பாபாவின் திருஉருவப் படத்தினை நினைவுப் பரிசாக வழங்கினர்.

ஒரு தலைவனின் தகுதி என்பது ஒழுக்கம், ஞானம், பகுத்தறியும் திறன் மற்றும் நிந்தனைக்கு அப்பாற் பட்ட தார்மீக ஒருமைப்பாடு ஆகியவற்றால் தீர்மானிக்கப்படு கிறது. சிறந்த தலைவர்கள் தகுதியால், மக்கள் நம்பிக்கை, தொலைநோக்கு பார்வை மற்றும் கருணையுடன் கூடிய கண்டிப்புடன் செயல்படுபவர்களாக இருக்க வேண்டும்.

தலைவனின் முக்கியப் பண்புகள் என்றால் உயர்ந்த ஒழுக்கம் அதாவது கேள்விக்கு உட் படுத்தப்படாத ஒழுக்கம், நேர்மை மற்றும் தார்மீக உறுதிப்பாடு ஒரு

தலைவனுக்கு மிக அவசியம். பகுத்தறியும் திறன். எது சிறந்தது, தேவையானது என்பதைப் பிரித்து அறியும் ஞானம்.

கருணை மற்றும் மன்னிப்பு, தவறு செய்பவர்களை மன்னித்து வழிநடத்தும் கருணை. நிதானமும் முதிர்ச்சியும். சரியான நேரத்தில் செயல்படவும், சரியான தருணத்திற்காகக் காத்திருக்கவும் தெரிந்திருத்தல்.

தொண்டர்கள் மற்றும் தன்னை பரிபூரணமாக நம்பும் மக்கள் ஆகியோரின் சுக துக்கங்களில் அவர்களுடன் நின்று பங்குபெற்று அவர்களை இலக்கை நோக்கி உத்வேகப்படுத்துதல். புறக்கவர்ச்சி மற்றும் தற்காலிக வாய்ப்புகளால் வராமல், தகுதியால் வருவதே சிறந்த தலைமைத் துவமாகும். இவை எல்லாம் நம்மை ஆள நினைக்கும் தலைமையிடம் நாம் எதிர்பார்க்கவேண்டிய அத்தியாவசியமான பண்பு களாகும்.

சாய் தினானாலயா ஆத்ம



ஞான பீடத்தின் அன்னதானக் குழுவினர் வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர். புத்தக வெளியீட்டு விழா மதியம் 2 மணிக்கு இனிதே நிறைவடைந்தது.

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.




வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்! ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 95 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திருமதி. மாலினி கணேஷ், சென்னை. ரூ.1500.
திரு. ஷ்யாம்,வேளச்சேரி. ரூ.1000.
திருமதி. உமா மகேஸ்வரி ஜோதிடர், அயனாவரம். ரூ.500.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திரு. ராமராஜன், பாபநாசம். ரூ.100
திரு. ரவிக்குமார். திருவள்ளூர். ரூ.100.
திருமதி. அனிதாமூர்த்தி. விழுப்புரம் ரூ.100.
திரு. கோபி. திருத்தணி. ரூ.100.
திரு. நாகராஜன். சென்னை ரூ.100.



சாய்சரிதம்-27

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

கதை வடிவில்

சாயி எவ்விதமான வரையறைக்கும் உட்பட்டவர் அல்ல! எறும்பு, பூச்சிகள் முதற்கொண்டு பிரம்மா வரையுள்ள எல்லா சீவராசிகளிலும் அவர் உறைந்திருக்கிறார். அவர் எங்கும் நிறைந்தவர். வேத ஞானத்தில் நன்கு பயிற்சியுடையவர். அதேபோன்று 'ஆத்ம உணர்வி'லும் வல்லவராக இருப்பதால், சத்குருவாய் இருப்பதற்கு சாயி மிகப்பொருத்தமானவர்.

சீடர்களை தட்டி எழுப்பி அவர்களை ஆத்ம உணர்வில் நிலைநிறுத்த முடியாத யாரும் எவ்வளவு படித்தவராக இருந்தாலும் சத்குரு என்று அழைக்கப்படுவதற்கு தகுதி இல்லாதவர்

ஆவார்.பொதுவாக இவ்வுடலை அன்னை ஈன்றெடுக்கிறாள். ஆயினும் தவறாமல் வாழ்வும், சாவும் பின் தொடர்கின்றது. அவை இரண்டையும் சத்குரு அழித்துவிடுகிறார். எனவே அவர் மற்ற எவரையும்விட அதிக அன்பும் கருணையும் உடையவர்.

பாபா அடிக்கடி கூறும் அருள் மொழிகளாவது, "எனது பக்தன் என்னிடம் இருந்து மூவாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் காலில் நூல் கட்டியுள்ள சிட்டுக்குருவி இழுக்கப்படுவதைப்போன்று அவன் சீரடிக்கு இழுக்கப்படுவான்".

சாயிநாதரின் இவ்வறிய அற்புதமான அருள் மொழிகளுக்கேற்ப மூன்று சிட்டுக் குருவிகள் சீரடிக்கு இழுக்கப்பட்ட கதையைக் கூறுகிறேன் கேளுங்கள்.

பம்பாயைச் சேர்ந்த லாலா லட்சுமிசந்த் என்பவர், முதலில் ஸ்ரீ வெங்கடேச்வர் அச்சகத்தில் வேலைசெய்து வந்தார். பின்பு சிலகாலம் ரயில்வேயிலும், அதன்பின்பு, ராலி பிரதர்ஸ் என்ற கம்பெனியில் குமாஸ்தாவாகவும் பணியாற்றினார். 1910 இல் பாபாவினுடைய தொடர்பினைப் பெற்றார்.



– வே.ஸ்ரீராம்

கிருஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது ஒரு முறை லட்சுமிசந்த் கனவு ஒன்றைக் கண்டார். அதில் தான் ஒரு கிருத்துவ ஆலயத்தின் முன் செல்வது போலவும் அப்போது ஆலயத்தின் முன்பு தலையில் துணி அணிந்துகொண்டு தாடியோடு நீள அங்கி அணிந்த ஒருவர் தன் பக்தர்களோடு நின்று கொண்டிருந்ததைக் கண்டார்.

அதன்பின்பு சிலநாட்கள் கழித்து தாஸ்கணுவின் சத்சங்கத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றார். தாஸ்கணு மகராஜ் தான் சத்சங்கம் செய்வதற்கு முன்பாக பாபாவின் திருவுருவப்படத்தை அலங்கரித்து வைப்பதை வழக்கமாக வைத்திருந்தார். லட்சுமிசந்த் பாபாவின் புகைப்படத்தைப் பார்த்ததும் வியந்து போனார். ஏனெனில் கிருத்துவ ஆலயத்தின் முன் நின்றிருந்த வயதானவரும் புகைப்படத்தில் இருந்தவரும் அச்சு அசலாக ஒரு மாதிரி தோற்றத்தில் இருந்தனர். லட்சுமிசந்த தனது கனவில் வந்தவர் சாயிபாபாவே என்று பரிபூரணமாக நம்பினார்.

அன்றைய சத்சங்கத்தில் பாபாவின் கதைகளை ரசித்துக் கேட்ட, லட்சுமி சந்த், தான் சீரடி சென்று சாயியை தரிசிக்க வேண்டும் என்று உறுதி கொண்டார். ஆனால் தான் சீரடிக்கு வர வேண்டும் என்றால் அதற்கு பாபாவே உதவி செய்ய வேண்டும் என்று மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டார்.

மனிதர்கள் உண்மையாக சத்குருவைத்

தேடினால், கடவுள் உடனடியாக உதவுவார் என்பது அநேக பக்தர்களின் அனுபவமாகும். லட்சுமிசந்த் சீரடி செல்ல வேண்டும் என்று நினைத்த அதே நாள் இரவு 8 மணிக்கு சங்கர்ராவ் என்ற நண்பர் அவரது வீட்டிற்கு வந்து நண்பர்கள் அனைவரும் சீரடிக்குச் செல்கிறோம் நீயும் எங்களுடன் வருகிறாயா என்று கேட்டார். அவருக்கு மகிழ்ச்சி என்றால் அப்படி ஒரு மகிழ்ச்சி.

உடனடியாக சீரடிக்கு செல்ல தீர்மானித்து மார்வாடியிடம் இருந்து ரூ.15 ஐ கடனாக பெற்றுக்கொண்டு தன் நண்பர்களுடன் சீரடிக்குப் புறப்பட்டார். இரயிலில் அவரும் அவரது நண்பர்களும் பாபாவைப்பற்றி பஜனைப் பாடல்களைப் பாடிக்கொண்டு சென்றனர். அப்போது அதே இரயிலில் தமது சொந்த ஊரான சீரடிக்கு திரும்பிக் கொண்டிருந்த சில இஸ்லாமியர்களிடம், நண்பர்கள் பாபாவைப் பற்றி விசாரித்தனர்.

அவர்களும், பல ஆண்டுகளாக சீரடியில் வசித்துவரும் சாயி பாபா ஒரு பெரும் ஞானி என்று கூறினார்கள். இரயில் கோபர்கான் வந்தபோது, லட்சுமி சந்துக்கு பாபாவிற்கு காணிக்கை கொடுப்பதற்கு சில பழங்களை வாங்க வேண்டும் என்று தோன்றியது. ஆனாலும் நண்பர்களுடன் பேசிக்கொண்டே வந்ததில் மறந்துவிட்டார். சீரடியை நெருங்கியபோது தான் அவருக்கும் பழங்கள் வாங்க வேண்டும் என்ற எண்ணம் ஞாபகத்திற்கு வந்தது. அதே நேரம் தலையில் பழக்கூடையுடன் ஒரு கிழவி அவரை நோக்கி வந்தாள்.

உடனே மகிழ்வுடன் அவளிடம் இருந்த பழங்களில் சில பழங்களை பொறுக்கி வாங்கிக் கொண்டார். அப்போது அந்த கிழவி, மீதம் இருக்கும் பழங்களையும் எடுத்துக்கொண்டு போய் என் சார்பில் பாபாவிற்கு சமர்ப்பியுங்கள் என்றாள் அக்கிழவி.

தான் பழங்களை வாங்க நினைத்து பிறகு மறந்து போனது. ஞாபகம் வந்தபோது பழக்காரக்கிழவி தன்முன்னே வந்தது. கிழவி மீதம் உள்ள பழங்களையும் பாபாவிற்கு சமர்ப்பிக்க கூறியது போன்ற சம்பவங்கள் நண்பர்களுக்கு வியப்பை அளித்தது.

அவர்கள் யோசித்துக் கொண்டே மசூதிக்கருகில் வந்து விட்டனர். பூஜை சாமான்களுடன் மசூதிக்குச் சென்று பாபாவை உரிய மரியாதையுடன் வணங்கினர். லட்சுமி சந்த பாபாவை நேரில் கண்டதும் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு கண்களில் கண்ணீர் ததும்ப பாபாவை வணங்கி மகிழ்ந்தார்.

அவரைப்பார்த்து பாபா கூறினார், வஞ்சகமான ஆசாமிகள், என்னைக்காண வரும் வழியில் என்னை புகழ்ந்து பஜனை செய்கின்றார்கள். ஆனால் நான் எப்படிப்பட்டவன் என்று மற்றவரை விசாரிக்கின்றார்கள். ஏன் விசாரிக்க வேண்டும். நமது கண்ணகளாலேயே நாம் அனைத்தையும் காண வேண்டும்



அல்லவா? மற்றவர்களை கேட்க வேண்டிய அவசியம் என்ன? உனது கனவு மெய்யா? பொய்யா? என்று நீயே எண்ணிப்பார். மார்வாடியிடம் இருந்து கடன் வாங்கிக் கொண்டு தரிசனத்திற்காக வரவேண்டிய தேவை என்ன? உள்ளத்தில் ஆசை இப்போது நிறைவடைந்து விட்டதா என்றார்

பாபாவின் இம்மொழிகளைக் கேட்ட லட்சுமி சந்த் அதிர்ச்சி யடைந்தார். பாபா எங்கும் நிறைந்தவர் என்பதை நேரிடையாக உணர்ந்து கொண்டார். தான் வீட்டில் இருந்து சீரடிக்கு வந்தது வரை நிகழ்ந்தவற்றை பாபா அறிந்திருக்கிறார் என்பதை அறிந்து வியந்து போனார்.

தனது தரிசனத்தை பெறுவதற் காகவோ, எந்த ஒரு விழாக்களை கொண்டாடு வதற்காகவோ, தீர்த்த யாத்திரை செய்யும் பொருட்டோ மக்கள் கடனாளியாவது பாபா விற்கு பிடிக்காது என்பதை நாம் பாபாவின் மொழிகளில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாள் மதிய வேளை உணவிற்காக லட்சுமி சந்த் அமர்ந் திருந்தபோது, நேற்று பரிமாறப்பட்ட கோதுமைப் பணியாரம் இன்றும் பரிமாறப்பட்டால் நன்றாக இருக்கும் என்று நினைத்தார். ஆனால் அன்று கோதுமைப் பணியாரம் பரிமாறப்படவில்லை. லட்சுமி சந்த் வருத்தமுற்றார். மறுநாள் மசூதியில் அமர்ந்திருக்கும்போது, ஜோக் அவர்கள் பாபாவிடம் வந்து இன்று மதியம் என்ன நைவேத்தியம் வேண்டும் என்று கேட்டார்.

பாபா லட்சுமிசந்த்தை பார்த்தபடி கோதுமைப் பணியாரம் செய்யுங்கள் என்றார். அன்று மதியம் இரண்டு பானைகள் நிறைய கோதுமைப் பணியாரங்களை பக்தர்கள் பாபாவிற்கு நைவேத்தியமாகக் கொண்டுவந்தனர். அப்போது லட்சுமிசந்த் மிகவும் பசியாய் இருந்தார். அவருக்கு சற்று முதுகு வலியும் இருந்தது. அப்போது பாபா, நீ பசியாய் இருக்கின்றாய் அல்லவா? கோதுமைப் பணியாரம் சாப்பிடு. முதுகுவலிக்கு ஏதாவது மருந்து போட்டுக் கொள் என்றார்.

பாபா, மீண்டும் தம் மனதை

படித்து தனக்கு விருப்பமானதை செய்கிறார் என்பதை நினைக்கும் போதே ஆச்சரியத்தால் திகைத்தார்.

அதே போல் ஓர்நாள் இரவு சாவடி ஊர்வலத்தை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது பாபா இருமலால் மிகுந்த அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். பாபாவிற்கு கண் திருஷ்டி பட்டிருக்கும் அத னால்தான் இருமலால் அவதிப் படுகிறார் என்று நினைத்தார். மறுநாள் காலையில் அவர் மசூதிக்குச் சென்றபோது, பாபா, மாதவ்ராவிடம் நேற்றிரவு நான் தாங்கமுடியாத இருமலால் அவதிப்பட்டேன். அது ஒரு சிலரின் கண்திருஷ்டினால் இருக்குமோ என்றார்.

பாபா, தனது மனதில் இருப்பதையே பேசினார் என்பதை அறிந்த லட்சுமி சந்த் பாபா சாதாரணமாக மனித உருவில் நம்மோடு சகஜமாக உலாத்திக் கொண்டிருக்கும் சாட்சாத் கடவுளேயாவார். அவர் எங்கும் நிறைந்து சர்வ வியாபியாய் இருக்கிறார் என்பதை நேரிடை சாட்சியாக அறிந்து கொண்டு, பாபாவை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, நான் தங்கள் தரிசனத் தால் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எப்பொழுதும் இதேபோல் என்பால் அன்பு கொண்டு என்னை காத்து அருளுங்கள்.தங்களது பாத கமலத்தைவிட எனக்கு வேறொரு அடைக்கலமில்லை. தங்களைத்தவிர வேறொரு கடவுளும் எனக்கில்லை. இவ்வுலக துன்பங்களில் இருந்து தங்களின் அருள் என்னை காக்கட்டும்.


சாயி சத்சரித ஆசிரியர்.
திரு.கோவிந்தராவ் ரகுநாத் தபோல்கர்

நான் எப்போதும் தங்களின் நாமத்தையே உச்சரிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

பாபாவின் உதியையும், ஆசியையும் பெற்றுக்கொண்டு திருப்தியுடன் வழியெங்கும் பாபா வின் நாமத்தை பாடிக்கொண்டு நண்பர்களுடன் வீடு திரும்பினார் லட்சுமிசந்த். பின்னாட்களில் பாபாவின் தீவிரமான பக்தராக வாழ்ந்தார். யார் ஒருவர் சீரடிக்குச் சென்றாலும் அவரிடம் பாபாவிற்கு, மாலைகளும், பழங்களையும், தட்சிணையும் அனுப்பத் தவறியதே இல்லை.

இப்போது நாம் இன்னொரு குருவியின் கதையைக் கேட்போம். பர்ஹாண்பூரில் உள்ள ஒரு பெண் சாயிபாபா தன் வீட்டின் வாயில்படியின் நின்று கிச்சடி பிச்சை கேட்பதாக கனவு கண்டாள். விழித்துப் பார்க்கையில் வாசலில் யாரையும் காணோம். இருப்பினும் அக் காட்சியால் உணர்ச்சிவசப்பட்டு தன் கணவன் உட்பட தமது வீட்டார் அனைவரிடமும் கூறினாள். அவரது கணவர் தபால் இலாக்காவில் பணியாற்றி வந்தார். அப்போது யாரும் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

விரைவில் அவளது கணவனுக்கு சீரடிக்கு அருகில் இருக்கும் அகோலாவிற்கு மாற்றலாகியது. பாபாவின் பக்தர்களான அவளும் அவளது கணவரும் சீரடிக்குச் செல்ல தீர்மானித்தார்கள். குறிப்பிட்ட நாளில் கோமதி தீர்த்தம் சென்று புனித நீராடிவிட்டு சீரடிக்குச்சென்று அங்கு இரண்டு மாதங்கள் தங்கினர்.

ஒவ்வொரு நாளும் பாபாவை தரிசித்து காலத்தை சந்தோசமாக கழித்தனர். மனைவிக்கு தன் கனவில் பாபா கேட்ட கிச்சடியை நைவேத்தியமாக சமர்ப்பிக்க மிகுந்த ஆசை. ஆனால் என்ன காரணத்தினாலோ பதினாங்கு நாட்கள் அவளால் கிச்சடியை தயார் செய்து பாபாவிற்கு நைவேத்தியம் செய்ய முடியவில்லை.

ஒருவழியாக பதினைந்தாவது நாள் கிச்சடியை தயார் செய்து கணவரும், மனைவியும் மசூதிக்கு எடுத்து வந்து விட்டார்கள். ஆனால் ஏற்கனவே பாபாவும் மற்றவர்கள் சாப்பிட அமர்ந்துவிட்டனர். அவர்கள் முன்பு வழக்கம்போல் துணியால் திரையிடப்பட்டது. ஆனால் அவளால் தாமதிக்க முடியவில்லை. திரையை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்து பாபாவின் இலையில் கிச்சடியைப் பரிமாறினாள். பாபாவும் கிச்சடிக்காக காத்திருந்ததைப்போன்று மிகவும் உற்சாகமாக உடனே கிச்சடியை மீண்டும், மீண்டும் கேட்டு வாங்கி உண்டார். பாபாவின் செய்கையைப் பார்த்து அனைவரும் அதிசயித்தனர். பின்பு கிச்சடி கதையை கணவன் மனைவியிடம் கேட்டு தெரிந்து கொண்டு, பக்தர்களின் மேல் பாபா வைத்திருந்த அன்பைக் கண்டு நெகிழ்ந்து போனார்கள்.

இப்போது நாம் மூன்றாவது குருவியின் கதையை கேட்போம். பாபாவின் அடியவரான ராவ்பஹதூர் ஹரிவினாயக் ஸாடேயின் சமையல் காரனான மேகா மிகவும் எளிமையானவன். படிக்காதவன். மிகச்சிறந்த சிவபக்தன். “நமசிவாய” என்ற மந்திரத்தை தவிர வேறொன்றையும் அறியாதவன். ஸாடே அவனது நல்ல குணத்தை கருத்தில் கொண்டு அவனுக்கு காயத்திரி மந்திரத்தை கற்பித்து சீரடியில் வாழும் சாயிபாபா சிவனின் அவதாரமே என்று கூறி சீரடி சென்று பாபாவின் தரிசனத்தைப் பெற ஏற்பாடு செய்தார்.

ஆயினும் மேகா, சாயிபாபா ஒரு இஸ்லாமியர் என்று கேள்விப்பட்ட அவனது வைதீகமான எளிய மனம் ஒரு முகம்மதியரை வணங்க

மறுத்தது. எனவே தான் சீரடிக்குச் செல்லவில்லை என்று தன் முதலாளியிடம் கேட்டுக்கொண்டான். ஆனால் அவரோ அவனை வற்புறுத்தி, சீரடியில் உள்ள தனது மாமனாராகிய தாதா கேல்கருக்கு இவனை சாயிபாபா விடம் அறிமுகப்படுத்துமாறு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தார்.

மேகா சீரடிக்குச் சென்று கேல்கருடன் மசூதிக்குச் சென்றபோது பாபா மிகவும் கோபத்தோடு இருந்தார். மேகாவைப் பார்த்ததும், மசூதிக்குள் நுழையாதே! என்றவாறே "அந்த ராஸ்கலை வெளியே தள்ளு" என்று கர்ஜித்தார். மேலும் " நீ உயர்ந்த சாதி பிராமணன். நான் கீழான இஸ்லாமியனோ, நீ இங்கு வருவதால் உன் சாதியை இழந்துவிடுவாய் அல்லவா? எனவே மசூதியில் கால் வைக்காதே! வெளியே போ" என்று கத்தினார்.

பாபாவின் கோபாவேசத்தால் மேகா நடுநடுங்கிப் போய்விட்டார். தன் மனதில் இருப்பதை பாபா எப்படி அறிந்து கொண்டார் என்று ஆச்சர்யப்பட்டான். பின்பு அங்கு சில நாட்கள் தங்கி பாபாவிற்கு சேவைகள் செய்து கொண்டிருந்தான். ஆனால் இன்னும் பக்குவப்படவில்லை. பின்னர் பாபாவிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். சிலமாதங்கள் கழித்து திரியகம்பேஸ்வரத்தில் ஒன்றரை வருடங்கள் தங்கியிருந்து விட்டு மீண்டும் சீரடிக்கு திரும்பி வந்தான்.

இம்முறை தாதா கேல்கர் பாபாவிடம் மேகாவிற்காக பரிந்து பேசி, அவன் சீரடியில் தங்கவும், மசூதிக்கு வந்து பாபாவை தரிசிக்கவும் அனுமதி வாங்கினார். பாபாவும் மேகாவின் மேல் மானசீகமாக அருள் செய்தார். இதனால் மேகாவின் மனதிற்குள் பெருமளவு மாறுதல் ஏற்பட்டது. இதனால் மேகா பெருமளவு நன்மையை அடைந்தான். காலப் போக்கில் மேகா சாயிபாபாவை சிவனாகவே பார்க்க ஆரம்பித்தான்.

சிவனை வழிபடுவதற்கு வில்வ இலைகள் தேவை என்பதால் ஒவ்வொரு நாளும் பல கிலோ மீட்டர்கள் அலைந்து திரிந்து வில்வ இலைகளை சேகரித்து வந்து பாபாவை வழிபடுவான். கிராமத்தில் உள்ள தெய்வங்களையும் வழிபட்டு பின்னர் மசூதிக்கு வந்து பாபாவை வழிபட்டு பாபாவிற்கு சில சேவைகளைச் செய்வான். பின்பு பாபாவிற்கு பாத பூஜை செய்து அந்த நீரைப் பருகுவது அவனது வழக்கம்.

ஒருமுறை கந்தோபா கோவிலின் கதவு மூடியிருந்ததனால் கந்தோபாவை வணங்காமலே மசூதிக்கு வந்து பாபாவிற்கு வணக்கம் செலுத்தினான். பாபா அவனது வணக்கத்தை ஏற்றுக் கொள்ளாமலே கந்தோபாவின் கதவு திறந்திருக்கிறது முதலில் கந்தோபாவை வணங்கிவிட்டு இங்கு வா என்று கூறி திருப்பி அனுப்பி அனுப்பி விட்டார். மேகா அங்கு சென்றுகதவு திறந் திருப்பதைக் கண்டு கந்தோபாவை வணங்கிவிட்டு பின் வழக்கம் போல் பாபாவை வந்து வணங்கினான்.

ஒரு மகர சங்கராந்தியன்று



பாபாவின் உடலில் சந்தனம் பூசி அவரை கங்கை நீரால் குளிப்பாட்ட மேகா விரும்பினான். பாபா முதலில் இதற்கு உடன்படவில்லை. மேகா தொடர்ந்து நச்சரித்ததால் பாபா அரை மனதோடு ஒத்துக் கொண்டார். கோமதி ஆற்றில் இருந்து நீர் கொண்டுவர மேகா 24 கிலோ மீட்டர் போய் திரும்ப வேண்டும்.

மேகா நீர் கொண்டுவந்து மதியம் ஸ்நானத்திற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு பாபாவை தயாராக இருக்கும்படி வேண்ட பாபாவோ கடைசியாக ஒருமுறை மறுத்துப்பார்த்தார். ஆனால் மேகா அதற்கு செவி சாய்க்க வில்லை. மாறாக கங்கை நீர் அபிசேகத்தால் சிவபெருமான் மகிழ்கிறார் என்றும் மேலும் இன்று மிகச்சிறந்தநாள் இன்று அவசியம் அபிசேகம் செய்தாக வேண்டும் என்று பிடிவாதமாக கூறியதால் பாபா தனது ஆசனத்தை விட்டு கீழிறங்கி அமர்ந்தார்.

பின்பு தன் தலையை மட்டும் முன்னே நீட்டிக்கொண்டு, "ஓ மேகா, இதையாவது தயவுசெய்து கேள். தலையே உடலின் பிரதானமாகையால், தலைமேல் மட்டும் நீரை ஊற்று. உடல் முழுவதும் குளிப்பதற்கு அது சமமாகும் என்றார். மேகாவும் அப்படியே ஆகட்டும் என்று அபிஷேகக்கலசத்தை தூக்கி தலையின் மேல் ஊற்றத்தொடங்கியவன் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, "ஹர் ஹர் கங்கே" என்று முழங்கிக்கொண்டு பாபாவின் உடல் முழுவதும் நீரை ஊற்றிவிட்டு பாபாவைப் பார்த்தான். மேகா ஆச்சரியத்தால் ஆடிப்போய்விட்டான். ஏனெனில் பாபாவின் தலை மட்டுமே நனைந்திருந்தது. உடலில் ஒரு சொட்டு நீர் கூட படவில்லை.

பாபாவை மேகா இரண்டு இடங்களில் வழிபட்டுவந்தான். மசூதியில் நேரடியாகவும், தான் தங்கியிருந்த வாடாவில் பாபாவின் பெரிய புகை படத்தையும் பூஜித்து வந்தான். இதை அவன் ஒரு வருட காலம் செய்து வந்தான். பின்னர் அவனது பக்தியை மெச்சி அவனது நம்பிக்கையை உறுதி செய்வதற்காக பாபா அவனுக்கு ஒரு காட்சி நல்கினார்.

ஒரு அதிகாலை வேளையில் எழுந்து கொண்ட மேகா விழிப் புடன் படுக்கையில் படுத்திருந்தான். அப்போது அவனது படுக்கையருகே பாபாவின் உருவத்தை மிகத்தெளிவாகக் கண்டான். பாபா அவன் மீது அட்சதையை தூவி, " மேகா திரிசூலம் வரை" என்று

கூறிவிட்டு மறைந்துவிட்டார். இவ்வார்த்தைகளைக்கேட்டு அவன் ஆவலுடன் கண்விழிக்க, அங்கு பாபாவைக் காணவில்லை. ஆனால் தன்னைச்சுற்றி அட்சதை சிதறிக்கிடப்பதைக் கண்டான்.

பின்பு மசூதிக்குச் சென்று, நடந்தவைகளை பாபாவிடம் விளக்கிக்கூறி தான் திரிசூலம் வரையட்டுமா என்று கேட்டான். உடனே பாபா ஏற்கனவே திரிசூலம் வரையும்படி நான் கூறிய சொற்களை நீ நம்பவில்லையா? எமது மொழிகள் எப்போதும் பொருள் நிறைந்தவை. வெறுமை யானதல்ல. என்றார்.

எல்லாக்கதவுகளும் மூடி யிருந்ததினால், நான் அதை கனவு என்று நினைத்து விட்டேன் பாபா, என்றான் மேகா, நான் நுழைவதற்கு எவ்வித கதவும் தேவையில்லை. எனக்கு எந்தவித உருவமோ, வடிவமோ கிடையாது. எப்போதும் எங்கும் நான் வசிக்கிறேன். என்னை முழுமையா நம்பும் மனிதர்களின் எல்லாக் காரியங்களையும் நானே நடத்துகிறேன் என்றார் பாபா.

உடனேமேகாவாடாவிற்குவந்து பாபாவின் படத்தினருகே சிகப்பு நிறத்தில் திரிசூலம் ஒன்றை வரைந்தான். மறுநாள் பூனாவில் இருந்து ஒரு பக்தர் பாபாவைக் காண வந்தார். அவர் பாபாவை வணங்கி அவருக்கு ஒரு சிவலிங் கத்தை சமர்ப்பித்தார். அதே நேரம் மேகாவும் அங்கே வந்தான்.

பாபா மேகாவைப்பார்த்து, "மேகா, சங்கர் வந்துவிட்டார் அவரைப்பிடித்துக்கொள் என்றார். திரிசூலத்தை வரைந்த உடனே லிங்கம் வந்ததைக்கண்டு மேகா ஆச்சரியமடைந்தான். பாபாவிடம் இருந்து லிங்கத்தைப் பெற்றுக்கொண்டு வாடாவிற்கு விரைந்தான்.

வாடாவில்காகாசாஹேப்தீட்சித் குளித்துவிட்டு தலைதுவட்டிக் கொண்டிருந்த போது, அவரது மனக்காட்சியில் ஒரு லிங்கத்தை நினைத்துக்கொண்டிருந்தார். அதே நேரம் அங்கே லிங்கத்துடன் வந்த மேகா, தனக்கு பாபாவால் வழங்கப்பட்ட லிங்கத்தை அவரிடம் காட்டி மகிழ்ந்தான்.

சிலநாட்களில் திரிசூலத்தை முழுமையாக வரைந்தவுடன் பாபா லிங்கத்தை அதனடியில் ஸ்தாபித்தார். சிவபூஜை செய்வது மேகாவிற்கு மிகவும் பிடிக்கும். திரிசூலம் வரையச்செய்ததும், அதனருகில் லிங்கத்தை ஸ்தாபித்ததும் அதன்மூலம் பாபா அவனது நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தினார்.

பல ஆண்டுகள் பாபாவிற்கு சேவைகள் செய்த பின்னர் 1912 ல் மேகா சிவபதம் எய்தினான். பின்னர் பாபா அவனின் உடல் மீது தனது கரங்களை வைத்து, " இவன் என் உண்மையான பக்தன்" என உரைத்தார். மேகாவின் இறுதிக் காரியங்களை பாபா தனது சொந்த செலவிலேயே செய்து வைக்க ஆணையிட்டார். அக்காரியம் தீட்சித்தால் நிறைவேற்றப்பட்டது.


ஸ்ரீ சாயியை பணிவோம்! சகல நன்மைகளையும் பெறுவோம்!

(தொடரும்)

தொடர் - 36

திருவருள் தேடி

குரு வாழ்க. குருவே எல்லாமும் எப்பொழுதும் எல்லோர்க்குமாய் அருளும் திருவருள். நமது வாழ்க்கை பயணத்தில் இன்றுவரை தேடிவந்து வளமான ஆன்மீக அனுபவங்களை நமக்கு வழங்கி, உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள ஆசீர்வதித்த ஸ்ரீராம் பாபாவிற்கும், வாசித்து ஆதரிக்கும் அனைவருக்கும், இத்தொடர் நிறைவின் முழுமையான வணக்கத்துடன் சுந்தர் சாய்.



ஒரு முறை நம்மில் பலருக்கும் நன்கு பழக்கமான முதிய சாயன்பர் தன்னுடைய சிறு குழுவில் இணைந்து தன்னுடன் ஷீர்டி பயணத்திற்கு வர வேண்டும் என வற்புறுத்தினார். சப்தஷ்ருங்கி (வனி) தர்சனமும், நாராயண் காவ் ஸ்ரீனிவாச பெருமாள் தர்சனமும், நாஷிக் திரையம்பகேஸ்வர் என டிசம்பர் மாத இறுதியில் மிக அருமையான சீசன் நம்மை வெகுவாக ஈர்க்க உடனே ஒப்புக்கொண்டு சென்றோம். மிகவும் நன்றாகவே தரிசனம், பயணம், தங்கும் வசதி எல்லாமே அமைந்தது பாபாவின் பசுமையான நினைவுகள் இன்றளவும் நம் மனதில் நிழலாடுகிறது.



சுந்தர் சாய்
9789404451

நாங்கள் ஷீர்டியை அடைந்து, சமாதி மந்திர் தர்சன் முடிந்து, குருஸ்தானில் 5 முறை வலம் வந்தவுடன், எனது வழக்கப்படி, அருகே உள்ள ஒரு பெஞ்ச் இல் அமர்ந்து பாராயணம் செய்ய தொடங்கினேன். மற்ற எல்லோரும் அவரவர் விருப்பம் போல் வேற இடங்களுக்கு சென்றனர். நானும் குருஸ்தான் எதிரில் ஆழ்ந்து பாராயணம் செய்த சமயம், நம்மை அழைத்து வந்த சாயன்பர், மிக பதட்டமாக நம்மிடம்

வந்து..' சாய்ராம் எனது கைப்பையை எங்கோ தவற விட்டுவிட்டேன். அதில் ரூபாய் 25,000 மற்றும் நமது ரயில் பயண டிக்கெட்களும் இருக்கின்றது என்று சொன்னார்.

நானும் பாராயணத்திலேயே கவனமாக இருந்ததால் அவரது பதட்டத்தையும் சங்கடத்தையும் பொருட்படுத்தாமல், குருஸ்தானை வலம் செய்யுங்கள் கிடைத்து விடும் என்று சொல்லிவிட்டு மீண்டும் என் பாராயணத்தை தொடர்ந்தேன். அவர் என்னுடைய அசட்டையான போக்கால் கோபமாக சென்று விட்டார். நானும் ஏன் அப்படி நடந்துகொண்டேன் என தெரிய வில்லை. அவசரம் மற்றும் அவசிய மான ஒத்துழைப்பை ரியாக்ட் செய்யாதது தவறல்லவா. அதுவும் ஒரு குழுவில் பயணிக்கும்பொழுது. வெட்கப்பட வேண்டிய தவறுதான்.

நான் பாராயணத்தை முடித்த உடன் திரும்ப வந்த அவர் எல்லா இடங்களிலும் விசாரித்தும் கிடைக்கவில்லை என்று வருந்தி, கோபமாய் அனைவரையும் விமர் சித்து விட்டு இனி தான் ஷீர்டிக்கே வரப்போவதில்லை இதுவே கடைசி என்றார். செக்யூரிட்டி ஆஃபிஸில் புகார் தெரிவித்தாகி விட்டது என்றவர் என்னிடம் தன் மனைவியிடம் சொல்லவேண்டாம், மிகவும் டென்ஷன் ஆகிவிடுவார் என கேட்டுக்கொண்டார். நானும் பாபா கை விடமாட்டார் என்று ஆறுதல் கூறி அவருடன் ரூமுக்கு திரும்பினேன்.

சுமார் 60 தடவைக்கு மேலே ஷீர்டி வரும் அவருக்கு, எல்லோரையும் நன்கு பழக்கம் ஆனால் ஹிந்தி பேச தெரியாது. சுமார் 12 மணிக்கு இருக்கும், மத்யான ஆர்த்தி தொடங்க இருக்கும் நேரம் அவரது மொபைலில் ஒரு அழைப்பு வந்தது. நான் அருகே இருந்ததால், ஹிந்தியில் பேசுகிறார் என என்னிடம் கொடுத்தார். செக்யூரிட்டி ஆபீசிலிருந்து பெயர் விசாரித்து, 2ஆம் நம்பர் கேட் அருகே உள்ள அவர்களை உடனே வந்து சந்திக்க சொன்னார்கள்.

நாங்கள் அங்கே சென்றவுடன், அடையாள அட்டையை பரி சோதனை செய்துவிட்டு, காணாமல் போன பையை காண்பித்து, அவர்கள் முன்னிலையில் அனைத்தையும் சரிபார்த்து, பெற்றுக் கொண்ட வகையில் கடிதம் எழுதி வாங்கி கொண்டு, அதிக கவனமாக இருக்கும்படி எச்சரித்து கைப்பையை கொடுத்தனர். ஒரு பக்தர் இதை குருஸ்தானில் கண்டெடுத்ததாகவும், அவர்கள் உடனே பஸ் ஸ்டாண்ட் செல்ல வேண்டியிருந்ததால் செக்யூரிட்டி யிடம் ஒப்படைத்து சென்று விட்டனர் என்றும் தெரிவித்தனர். நாங்களும் அவர்களுக்கு நன்றியை தெரிவித்து, பாபாவிற்கும் நமஸ்காரம் செய்து திரும்பினோம்.

சாய் வாக்கு பொய்யாவதில்லை என்பதை மீண்டும் நிரூபித்த சம்பவம் இது. ஆம் சாய் சத்சரி தத்தை மனம் ஒன்றி பாராயணம் செய்தால், நம்முடைய கவலைகள் பாபாவால் கவனமாக தீர்த்து வைக்கப் படும் எனும் பரம சத்ய வாக்கு அல்லவா!

சாய் நமக்களிக்கும் அற்புத



அனுபவங்களில் மற்றுமொரு சாய் லீலா இன்றளவும் நமக்கு சற்றே கூடுதலாகவே வியப்பு கலந்த மகிழ்வையளிப்பது. சுமார் ஒரு வருடம் முன்னர் மயிலாப்பூரில் சாய் சத்சங்கம் ஒரு பக்தர் வீட்டில் நடந்த சமயம் அறிமுகமான ஒரு புதுமுகம். அது வரை சாய் வழிபாடு, பக்தி என எதுவும் இன்றி தன் அம்மாவுடன் துணையாக வந்த ஒருவருக்கு, முதல் அறிமுக சந்திப்பிலேயே பாபாவின் அற்புதம் கலந்த ஆசீர்வாதம் அசத்தலாய் அருளப்பட்டது.

அன்று எங்கள் பாராயணம் முடிந்தவுடன், பாபாவிற்கு அஷ்டோத்ர அர்ச்சனை செய்ய எண்ணி, அந்த புதிய நபரை அழைத்து அவரை பூக்களை பாபாவின் பாதத்தில் சேர்க்க சொன்னோம். சத்சங்கம் முடிந்து பிரசாதம் சாப்பிட்டு கிளம்பும் சமயம், அவராக என்னிடம் வந்து தனிமையில் அவரது சொந்த பிரச்சனை பத்தி பேசவேண்டும் என்றார். அவரது வயது முதிர்ந்த அம்மாவை எனக்கு தெரியும். நமது சத்சங்க பாராயணங்களில் ஆர்வத்துடன் கலந்து கொள்வார்.

முதல் முறையாக சத்சங்கத்திற்கு வந்த அவரது பெண் என்னிடம் வந்து..' சாய்ராம் அங்கிள் என் பெயர் சஜினி ஐயர், நான் ஸ்வீடனில் வேலை செய்கிறேன். ஆனால் தற்சமயம் அவர்கள் எனக்கு 3 மாத முன் அறிவிப்பு செய்து வேலையில் ஆட் குறைப்பு செய்வதால், வேறு வேலைக்கு முயற்சி செய்ய சொல்லிவிட்டனர். எனக்கு வேறு நல்ல வேலை மாற்றம் கிடைக்க வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.

நானும் அவருக்கு பாபாவின் ஆசி இருப்பதால் மட்டுமே இன்று அவர் சத்சங்கத்தில் கலந்து கொள்ளவும், அர்ச்சனை செய்யவும் வாய்ப்பு கிட்டியுள்ளது. எனவே தொடர்ந்து பாபாவிடம் முழு நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்யவும், நிச்சயம் வேறு நல்ல வேலை கிடைக்கும் என்றும், என்னுடன் அலைபேசியில் தொடர்பில் இருக்குமாறு நம்பிக்கையும் ஆறுதல் வார்த்தைகளும் கூறினேன். அவரும் சற்றே மன நிம்மதியுடனும் நம்பிக்கையுடனும் சென்றார்.

அடுத்த 15 –20 நாட்கள் சென்ற பின் வாட்ஸாப் மூலம் தொடர்பு கொண்டு என்ன ஸ்லோகம் சொல்ல, எப்படி பாபாவை வழிபட வேண்டும் என்றெல்லாம் கேட்டார். மிகவும் நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும் செய்ய தொடங்கினார். கால தாமதன்றி ஒரு நல்ல கம்பெனியில் வேலைக்கு வாய்ப்பு கிடைத்து. வியாழக்

கிழமை இன்டெர்வியூ நடந்தது. அதில் தேர்வு பெற்று அடுத்த சுற்றுக்களும் வியாழக்கிழமைகளில் என 3 முறை நடைபெற்றது. இதை ஒரு சாதாரண இயற்கை நிகழ்வாய் எண்ணினாலும், மலரும் சாய் பக்தியும் நம்பிக்கையும் பிரத்யேக பாபாவின் கவனிப்பு மற்றும் ஆசியையும் உறுதி செய்தது. அத்துடன் அன்றி வேலைக்கான ஆர்டரும் பாபா நாளான வியாழனன்றே, அவர்கள் சொன்ன கெடுவுக்கு முன்னதாகவே கிடைத்தது.


வியப்பு,நிம்மதி என உணர்ந்த வேளையில், அவர்கள் கேட்ட எல்லாவித ஆவணங்களையும் ஏற்பாடு செய்வது என்பது இயலாது போய்விடுமோ என எண்ணி கவலை தெரிவித்தார். நான் அவரிடம் ' நீ இப்போது பாபாவின் செல்லக்குழந்தை ஆகிவிட்டாய் " எல்லாம் பாபாவே பார்த்துக் கொள்வார் என ஆறுதல் கூறினேன். மீண்டும் அதே ஒரு வியாழனன்று பிராயணத்தில் நண்பர் ஒருவரை சந்தித்து அவர் உதவியுடன் எல்லாவற்றையும் பூர்த்தி செய்ததுடன் வியாழன் அன்றே மங்கள கரமாய் வேலையிலும் சேர்ந்துவிட்டார்.

வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் தன் வாழ்வில் ஒரு முக்கிய பிரச்சனையான நேரத்தில் இங்கு வந்ததுடன், புதிதாய் நம்மை சந்தித்து பாபா பக்தையாக மலர்ந்தது, நம்பிக்கையுடன் நமது பாபாவை ஏற்றுக்கொண்டு, நாடு திரும்பி ஸ்வீடனில் நிம்மதியா வாழ்ந்து வரும் அவர் வாழ்வில் கடந்த ஒரு வருடமாக எல்லா முக்கிய நிகழ்வுகளும் வியாழக் கிழமையிலேயே நடப்பதை எவ்வாறு உணர்ந்துகொள்வது?

மேலே சொன்ன அனுபவங்கள் மிகவும் சொற்பமே. மேலும் பார்ப்போம் – இப்போது அவர் வீடு மாற வேண்டி வந்தது. ஒரு பாதுகாப்பான குடியிருப்பை சென்று பார்த்து முடிவு செய்ததும் வியாழன் அன்றே. அடுத்ததாக அவரது விசா முடிவுக்கு வர, (கொஞ்சம் பதட்டத்துடன்) , உலகெங்கும் அந்நிய நாட்டவர்க்கு விசா வழங்குவதில், புதிய கெடுபிடியுடன் பதைபதைப்பான சூழ்நிலை யில் விசா இன்றி வேலையில் தொடர முடியாதே! எனும் பொழுது,பாபா அவருக்கு அடுத்த கட்டமான குடியிருப்பு உரிமையே கிடைக்கும்படி அருள் புரிந்திருக்கிறார்..

அதற்கான நேர்முகம் மற்றும் பயோமெட்ரிக் பதிவுக்கான ' ஸ்லாட் ' கிடைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. பாபாவிடம் வேண்ட அடுத்த வியாழனன்றே ஒருவர் கேன்சல் செய்ய அந்த இடம் அவருக்கு கிடைத்து வெற்றிகரமா குடியிருக்கும் உரிமையும் கிட்டியது. அடுத்த கட்டமும் தொடரும் சோதனை, சாதனையாக மாற அவர் வாழ்வை வளமாக்கும் நமது சாய் உத்தரவாதமும் தொடர்ந்து மேன்மேலும் ஆச்சர்யப் படுத்தும் நிகழ்வுகளை காண்போம் வாருங்கள் நண்பர்களே,

அடுத்ததாக அவரது இந்திய பாஸ்போர்ட் காலாவதியாகி, புதுப்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. எனவே அதை அவர்



‘ கூரியர் சர்வீஸ் ‘ மூலம் இந்திய தூதரகத்துக்கு அனுப்பினார் . ஆனால் அது வழியில் ‘ மிஸ்ஸிங் என்று ரிப்போர்ட் ‘ வந்து டென்ஷன் கூடியது. என்ன செய்வது என வழி தெரியாது கவலை பற்றிக் கொண்டது. உடனே எனக்கும் செய்தி தெரிவித்து பாபாவிடம் வேண்டிக் கொள்ளுங்கள் என்றதுடன், பாபா அவரது பக்தியையும்,நம்பிக்கை + பொறுமையுடன் சேர்த்து சோதனை செய்வதாக உணர்கிறேன் என்றார்.

நானும் அந்த சமயம் ஷீர்டியில் இருப்பதால் சமாதி மந்திரிலேயும், குருஸ்தானிலும் சாய் மஹராஜிடம் கோரிக்கை வைக்கிறேன், நிச்சயம் கிடைக்கும் பயம் வேண்டாம் என்றேன். அதுவும் மீண்டும் ஒரு வியாழனன்றே அசத்தலாக திரும்ப கிடைத்துவிட்டது. நல்லபடியாக பிரச்சனை எதுவுமின்றி வெற்றிகரமாய் பாஸ்போர்ட் புதுப் பிக்கப்பட்டும் விட்டது, பாபாவின் ஆசியால்.

இப்படி தொடர்ந்த பாபாவின் பக்தியும், ஆன்மீக நம்பிக்கையும் அவர் வாழ்வில் சிறு சிறு சோதனைகளை கடந்து, புடம் போடப்பட்டு நங்கூரம் இடப்பட்ட கவிழாத கப்பல் போன்று அலையலையான பிரச்சனைகளில் இருந்து மீண்டு வருவதே அன்றாட வாழ்க்கை என்பது தெளிவான பாடமாகி விட்டது . இப்போ “சர்வம் சதா சகலம் சாய்ராம்“ என அச்சமின்றி அயல் நாட்டில் தனிமையில் வாழும் ஒருவரை ஆட்கொள்ள நம்மை சாக்ஷியாக ஆக்கிய பாபாவின் சங்கல்பம் அற்புத அனுபவம் தானே நம் அனைவருக்குமே.

ஸ்ரீ ஷீர்டி சாய் பாபாவின் அற்புதங்களும், ‘ எனது பக்தர்கள் உலகின் எந்த மூலைக்கு சென்றாலும் நானும் உடன் வந்து காப்பேன் ‘ எனும் வாக்கின் உத்தரவாதமும் இன்றளவும் இவ்வாறே தொடர்வதும் சாய் சத் சரிதத்தின் தொடர்ச்சியே!. கதா பாத்திரங்களும், கருவும் மாறினாலும், அபார கருணா கடாக்ஷம் மட்டும் அள்ள அள்ள குறையாது அக்ஷயமாய் வளர்வதும், பலரது வாழ்வு மலர்வதும் ஆனந்த அனுபவங்கள் மட்டுமன்றி, நம் அனைவரது நம்பிக்கைக்கும் அஸ்திவாரமுமாகும். காலங்களை கடந்து நம்மை காக்கும் – சத்ய, சாய் வாக்கு.

நாம் இவற்றிற்கெல்லாம் எப்படி நன்றி செலுத்துவது? யாமறிந்த

வகையில் 1) பாபாவின் அற்புத லீலைகள் உணர்த்தும் – நம்பிக்கை, பொறுமை நிலையான பாடமாய் அறிந்து நம் அன்றாட வாழ்வில் பூரண மாற்றம் காண வேண்டும். 2) நமது அனுபவங்கள் மூலம் நமது அடுத்த தலைமுறைக்கு இந்த நம்பிக்கையை ஊட்டி, அதன் நன்மைகளை பறை சாற்றி, இளைஞர்கள் நலமுடன் வாழ வழி காட்ட வேண்டியதும் நம் தலை யாய கடமை. ஏனெனில் நமக்கு கிடைக்கும் இந்த அறிய அற்புத ஆன்மீக அனுபவங்கள் எல்லா நேரங்களிலும், எல்லா இடங் களிலும், எல்லோருக்குமே மிக மிக பலனளிக்க கூடிய எளிய வாழ்க்கை பாடம் என்பதில் ஏது சந்தேகம்?

நன்றிகள் பலமுறை தேடி வந்த திருவருளுக்கும் , நம்மை நாடி வந்து வழி நடத்தும் குருவருளுக்குமாய் இன்றும் என்றும் பிறவிகள் பல கடந்தும் காத்து நிற்கும் அருட்பெரும் பிரபஞ்ச மஹா சக்தியாய் விளங்கும் சாய் பகவானின் கருணா கடாக்ஷத்திற்கும். சுந்தர் சாய் இங்கு நிறைவு செய்யும் இத்தொடர் பயணம், தொடரும் பயணமாய் வளர வாழ்த்திட உங்களனைவரையும் வேண்டி வணங்குகிறேன் எனதருமை சாய் சொந்தங்களே! ஆன்மீக பயணங்கள் முடிவதில்லை. பயணிப்பவர்களும் ஏராளம், அன்றும், இன்றும்.. என்றென்றும்..

நன்றி! வணக்கம்.

(நிறைவடைந்தது)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

கவலை நீங்கள் வாங்கும் கடன்



எதைப்பற்றியும் கவலைப் படாதீர்கள். கவலை எவருக்கும் எந்த நன்மையும் தராது. அதற்குப்பதில் உங்களது எல்லா காரியங்களையும் கெடுத்துவிடும். "கவலை நீங்கள் வாங்கும் கடன்" என்பதை மறந்து விடாதீர்கள். வேறு யாரும் உங்களுக்கு கவலையை கொடுப்ப தில்லை. நீங்களே அதை வாங்குகிறீர்கள். நீங்கள் வாங்க வில்லை என்றால் உங்களுக்கு கவலை இல்லை.

நீங்களே உங்கள் கவலைக்குக் காரணம். வேறு யாரும் உங்களுக்கு கொடுக்க முடியாது. வீணாகக் கவலைப்படாதீர்கள். கவலை உங்களது எல்லா ஆற்றல்களையும் உறிஞ் சிவிடும். கவலை உள்ள மருத்துவரால் அறுவைசிகிச்சை செய்ய முடியாது. கவலையுள்ள மாணவரால் தேர்வு எழுத முடியாது. என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

எனவே கவலை கொள்ளாதீர்கள். நாம் ஒவ்வொன்றும் உடனே நடக்க வேண்டும் என்று அவசரப்படுகின்றோம். அதுதான் நமது கவலைக்கு முக்கிய காரணம். இயற்கையை அதன் போக்குக்கு விட்டுவிடுங்கள். இயற்கையே இறைவன். இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள். கவலை இல்லாமல் வாழலாம்.

பக்குவம்

நாம் எல்லோருமே வறுக்கப் படுகின்ற முந்திரி கொட்டைகள் தான். முற்றிலும் வறுபடும்முன் வாணலியில் இருந்து வெளியே குதித்துவிடாதீர்கள். வறுபடாத கொட்டையை யார் தின்ன விரும்புவார்கள். அது வறுக்கபடாத கொட்டை என்று ஒதுக்கப்பட்டுவிடும். ஆகையால் எவ்வளவு வறுபட்டாலும் வாணலிக்குள்ளேயே இருந்து கொண்டு ஆண்டவனின் மேல் பாரத்தைப் போட்டு முழு நம்பிக்கையாக இருங்கள்.


பிறகு ஒவ்வொன்றும் தானாக நடக்க ஆரம்பிக்கும். உங்கள் வாழ்க்கை சுமூகமாக நடக்கும். எதைப்பற்றியும்



கவலைப்படாதீர்கள். சில சமயங்களில் உலகத்தின் எதிர்காலத்தைப்பற்றி கூட கவலைப்படுவீர்கள். ஒவ்வொரு நாடு களுக்கிடையே என்ன நடக்குமோ, எப்போது நடக்குமோ என்று. வெடி பொருட்களும், அணுகுண்டுகளும் போர் தளவாடங்களும் குவிக்கப்படு கின்றனவே என்று கவலைப்படுவீர்கள்.

உங்கள் கவலையால் நீங்கள் சாதிக்கப் போவது என்ன? கவலைப் படுவதால் ஒரு பயனும் இல்லை. அமைதியாக நடப்பதை கவனித்துக் கொண்டிருந்தால் நம்மால் என்ன செய்ய முடியும் என்பதாவது நமக்குப் புரியும். உங்கள் பங்கை செய்ய முடியும். மற்றதை ஆண்டவனிடம்தான் விட்டுவிட வேண்டும்.

ஏகத்துவம்



பிரபஞ்சம் முழுவதும் நிறைந் துள்ள சுத்த வெளியை, இறைநிலை என்றும், ஏகத்துவத்தின் அடிப்படை என்றும் வரையறுக்கிறார் "தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி" அவர்கள். மேலும் இறைநிலையானது அழுத்தம், ஒலி,ஒளி, சுவை,மணம் என்ற ஐந்து தன்மாத்திரை களாகவும், பஞ்ச பூதங்களாகவும், பின் உயிரனங்களாகவும் பரிணாமம் அடைந் துள்ளது. எனவே எல்லாம் ஒன்றே!

அதை தொடர்ந்து மனித அறிவு அந்த அகண்ட பிரபஞ்ச அறிவின் ஒரு பகுதி என்றும், 'நான்' என்பது அந்த ஒட்டு மொத்தத்தின் ஒரு அங்கம் என்றும், அதை உணர்வதே உண்மையான ஏகத்துவ ஞானம் என்றும் விவரிக் கிறார்.

மேலும் மனதை அகத்தவத்தின் மூலம் அமைதிப்படுத்தி அந்த சுத்த வெளியோடு இணைக்கும் போது மனிதன் தனது உண்மையான ஏகத்துவ தன்மையை உணர்கிறான். ஏகத்துவத்தை உணர்ந்தவர் பிற உயிர்களை தன்னுயிராக மதித்து கவலைகளிலிருந்து விடுபட்டு அன்போடு வாழ்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார் .

இதையே "வள்ளல் பெருமானார்" எல்லா உயிர்களையும் தன் உயிர் போல் பாவித்து வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்றும் ஜீவகாருண்யமே தனி மனித ஒழுக்கம் என்றும் கூறிப்பிடுகிறார் அதையே இன்னும் இலகுவாக "பகவான் சாய்நாதர்" ஒரே வரியில் எதை பிடித்தாலும் இருக்கி பிடி என்று கூறுகிறார். இவ்வாறு ஏகத்துவத்தை பற்றி கூறாத மகான்களே இல்லை அவர்கள் கூறுவதோடு நின்று விட வில்லை மக்களோடு மக்களாக எளிய முறையில் ஏகத்துவமாகவே வாழ்ந்தும் வாழ்ந்து கொண்டும் இருக் கிறார்கள் .

சொ.அகஸ்டின்

அவ்வகையில் இக்காலத்தில் நம்மோடு ஏகத்துவமாகவே வாழ்ந்து வரும் நம்குரு "யோகி ஸ்ரீராம் பாபா" அவர்கள் பகவான் சாய் நாதர் சொன்னதை போல எதை பிடித் தாலும் இருக்கிபிடி என்ற தத்துவத்தை உள்வாங்கி சொன்ன வரையே இருக்கி பிடித்துக்கொண்டார். அவ்வாறு இருக்கி பிடித்த நம் குருவை கடந்த 2018 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய நண்பர் வெங்கடேஷ் அழைப்பை ஏற்று சந்திக்க சென்றேன்.

அங்கு சத்சங்கம் நடைபெற்று கொண்டிருந்தது. அப்போது எனக்கு சத்சங்கம் என்றாலே என்னவென்று தெரியாது அவர் பேசினார் அப்பேச்சை கேட்டேன் அவ்வளவுதான். ஆனால் அவர் பேச்சு என் மனதை வருடியது இரண்டு மணி நேரம் எப்படி சென்றது என்றே தெரியவில்லை பிரிய மனமில் லாமல் பிரிந்து சென்றோம். அங்கிருந்து புறப்பட்டுவிட்டாலும் குருவின் பேச்சு என் செவிகளை துளையிட்டு தலையில் ஓங்கி ஒலித்து கொண்டே இருந்தது.அது ஏதோ எனக்கு புதுவிதமாக இருந்தது . முதன் முதலில் செவிக்கும் பசி எடுக்கும் என்பதை உணர்த்தியவர். அவரின் சொற்பொழிவு மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும் என்ற ஆவலை தூண்டியது .

அவ்வாறு அடுத்த ஞாயிற்றுக் கிழமை சென்றேன் அந்த அறையே விழாக் கோலமாக இருந்தது அமர்வ தற்க்கு இடமில்லை ஓர் ஓரத்தில் நின்று குருவின் சொற்பொழிவை கேட்டுக்கொண்டே இருந்தேன். அவரின் பேச்சு பேரின்ப வாசலாகவே தோன்றியது. சொற்பொழிவு முடிந்ததும் சாயி மகராஜ் குருவை தேடி புத்தகத்தின் இரண்டாம் இதழ் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடந்தது. அப்போது தான் தெரியும் புத்தகமும் எழுதுவாரென்று வெளியீட்டின் போது குரு கூறினார். இந்த புத்தகத்திற்க்காக நான் ஒரு ரூபாய் கூட போடவில்லை எல்லாம் பாபாவின் செயல் என்றும் நான் ஒரு கருவியே என கூறினார் எனக்குள்ளே

ஓர் கேள்வி எழுந்தது. அது எப்படி பணம் போடாமல் புத்தகத்தை வெளியிட முடியும் ?

அக்கேள்வியோடு புத்தகத்தை படித்தேன் சுவாரசியமாக இருந்தது குறிப்பாக குருவை தேடி என்ற தொடர் இவ்விதழில் இருந்தது அதற்காக முதல் இதழையும் வாங்கி படித்தேன் அதில் மனசாட்சி என்ற தலைப்பில் திரு .மாதவராஜ் என்பவர் நீங்கள் ஏன் பாபாவை பற்றி ஒரு பத்திரிக்கை ஆரம்பிக்க கூடாது என்று நம் குருவை கேட்கிறார்.

அதற்கு நம்குரு நானோ பட்டுப்போன மரம் பாபா தயவில் காலத்தை தள்ளிக் கொண்டு இருக்கேன் என்று கூற உங்க பொருளாதார நிலை எனக்கு தெரியும் நீங்க ஆரம்பித்து நடத்துவது கஷ்டம் தான் ஆனா பாபா ஆரம்பித்து நடத்துறதுல அவருக்கேது கஷ்டம் என்று கூறகிறார்.

பாபா இவர்கள் மூலமாக தானே வருவார் என்ற நம்பிக்கையோடு சரி என்று 01.01.2018 அன்று வேலையை துவங்கி இருக்கின்றார் நம்குரு மறுநாள் கோவையில் இருந்து நண்பர் ஒருவர் தொலைபேசியில் அழைத்துள்ளார் எதேச்சையாக அவரிடம் பத்திரிகை பணியை விவரித்திருக்கிறார் நெருங்கிய நண்பர் என்பதால் சட்டென்று என்ன நினைத்தாரோ தெரியவில்லை என் கையில் தற்போது 3500 ரூபாய் உள்ளது அதை உங்கள் சாயி மகராஜ் பத்திரிகைக்காக காணிக்கை அளிக்கிறேன் என கூறியதோடு நில்லாமல் உடனே அனுப்பியும் உள்ளார்.

இதை சற்றும் எதிர் பார்க்காத நம் குரு எல்லாம் பாபாவின் கருணை தான் 1 ரூபாய் கூட இல்லாமல் ஆரம்பித்த பாபாவின் பணிக்கு முதல் காணிக்கையாக ரூ 3500/– வந்ததையும் அதை தொடர்ந்து கல்லூரி படிக்கும் ஓர் அன்பு சகோதரி தன் பாக்கெட் மணியை மிச்சப்படுத்தி ரூபாய் 100/– கொடுத்ததையும் இன்னும் பல நிகழ்வுகளை மனசாட்சி என்ற தலைப்பில் படித்தேன்.நான் செய்கிறேன் என்ற சிந்தை இல்லாமல் பாபாவின் பணியை செய்கிறார் அதனால் அன்று முதல் இன்று வரை இப்புத்தகத்திற்க்காக 1ரூபாய் கூட நான் போடுவதில்லை என்பதை அழுத்தமாக சொல்கிறார். பணம் இல்லாமல் எப்படி புத்தக பணி நடக்கும் என எனக்குள் எழுந்த கேள்விக்கு முதல் இதழிலேயே விளக்கம் கொடுத்துவிட்டார் .

“பகவான் சாய் நாதரை” இருக பற்றியதன் விளைவாலும் அவர் மீது வைத்த நம்பிக்கையாலும் புத்தக பணி இன்று வரை சிறப்பாக செல்கிறது. அம்மாதிரியே நாமும் குருவை பற்றிக்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து பயணித்தேன் சில வாரங்களிலேயே சபை காலி செய்யப்பட்டு வீட்டிலேயே சத்சங்கம் நடத்த ஏற்பாடு செய்தார். என்னாச்சு குரு ஏன் இடத்தை மாற்றுகிறீர்கள் என்று கேட்டேன். பாபாவின் கட்டளை இதுவாக இருப்பின் மறுப்பதற்கு ஏது என்று இயல்புநிலை மாறாமல் கூறினார். அங்கு நிலவிய சூழல் வேறுமாதிரி இருந்தாலும் பகவான் சாய்நாதரின் செயல்களே என்று நினைத்து அப்படியே ஏற்றுக்கொள்வார்.இப்படி ஒவ்வொரு விஷயத்திற்கும் பகவான் பெயரை உச்சரிக்காமல் இருந்தது இல்லை

ஏகத்துவத்தை பற்றி ஏட்டு கல்வி யோடு நின்ற எனக்கு ஏகத்துவமாகவே வாழ்ந்து வரும் நம் குரு “யோகி ஸ்ரீராம் பாபா” அவர்களை சந்தித்ததே எனது பிறவி பலனாக கருதுகிறேன். ஆகவே சாய் சொந்தங்களே! எம்மை சுற்றி நடக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் நம் குருவே செயல் படுத்துகிறார் என்பதை ஆழமாக நம்புகின்றேன். நடந்தது அனைத்தும் குருவினாலே ! நடப்பது அனைத்தும் குருவினாலே!! இனி நடக்க இருப்பது அனைத்தும் குருவினாலே!!!

குரு வாழ்க குருவே துணை!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மௌனத்தின் மூலம் தவம்"



பிறந்தநாள், திருமணப்பரிசாக
அளிக்கக்கூடிய சிறந்த நூல்

புத்தகம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்

விலை: ரூ.100/-
(தபால் செலவு உட்பட)

தொடர்புக்கு: 9941816692.


SAI DHYANALAYA



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.




ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)


SAI DHYANALAYA


G- PAY NO: 9941816692






சாயி தரிசனம்














சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

ஸ்ரீ ஈசானிய ஞான தேசிகர்

யோகி ஸ்ரீராம் பாபா



திருவண்ணாமலை, சித்தர்கள், மகான்கள் வாழ்ந்த புண்ணிய பூமி ஆகும். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகர் ஆவார். திருவண்ணாமலையின் ஈசான்ய மூலையில் இருந்து மக்களுக்கு அருள் செய்ததால், ஈசான்ய ஞானதேசிகர் என்றும் அழைக்கப் பட்டார்.

பாலாற்றங்கரையை ஒட்டியுள்ள ராயவேலூர் என்ற ஊரில் வாழ்ந்த திருநீலகண்டர், உமைய பார்வதி தம்பதியினருக்கு அண்ணாமலையார் அருளால் 1750 – ம் ஆண்டில் மகனாக அவதரித்தார். பெற்றோர் இவருக்கு கந்தப்பன் என்று பெயரிட்டனர். சிறு பருவத்திலேயே சகல சாஸ்திரங்களையும், புராண இதிகாசங்களையும் கற்றுத் தேர்ந்த இம்மகான், குரு கேட்கும் முன்னரே அத்தனை பாடங்களையும் சொல்லும் அளவுக்கு ஞானமும் சக்தியும் பெற்றிருந்தார்.

இவர் தன் பெரும்பொழுதை தியானத்தில் கழித்தார். இவர் திருமணம் செய்து கொள்வதில் விருப்பம் இல்லாது, பெற்றோரின் உத்தரவு பெற்று துறவறம் பூண்டார். சிவபெருமானிடம் மனம் ஈடுபட்டு இவர் சிவ ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தார். வழியில் பல மகான்களின் மடங்களுக்கும், ஜீவ சமாதிகளுக்கும் சென்று தரிசனம் செய்தார்.

பின் சிதம்பரத்தை அடைந்து தில்லை நடராஜரை தரிசித்தார். அங்கு வாழ்ந்த பிரம்ம யோகி ஸ்ரீ மௌனகுரு சுவாமிகளிடம் தீட்சை பெற்றார். அவரிடமே பல ஆண்டுகள் இருந்து வேத, வேதாந்த உண்மைகள், பிரம்ம தத்துவங்கள், உலக வாழ்க்கை ரகசியங்கள் என சகலத்தையும் கற்றுத் தேர்ந்தார். தன் குருவின் ஜீவ சமாதிக்குப் பின் மீண்டும் தனது தல யாத்திரையைத் தொடர்ந்தார்.

தில்லையம்பதி விட்டு புறப்பட்டு திருவாரூர் தியாகராஜ சுவாமிகளை

தரிசித்து, பின் மடப்புரம் மகான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்று சுவாமிகளுடன் சிலகாலம் வாழ்ந்தார். பின் நாகப்பட்டினம் அருகே உள்ள சிக்கல் என்ற ஊரை அடைந்து அங்கு குடிகொண்டுள்ள சிங்கார வேலனைத் தரிசனம் செய்தார். பின் அங்கே எப்பொழுதும் பிரம்ம நிஷ்டையிலேயே இருப்பவரான 'உகண்ட லிங்க ஞான தேசிகர்' என்னும் மகானின் ஆசியையும் பெற்றார்.


அதன்பின் தனது யாத்திரையை தொடர்ந்து, திருவண்ணாமலைக்கு அருகே உள்ள, வேட்டவலம் என்ற ஊரை அடைந்தார். அங்கு சில காலம் தவம் செய்தார். இறுதியில் அண்ணாமலை ஸ்தலத்தை அடைந்தார். அங்கே அண்ணாமலையின் ஈசான பகுதியில் தங்கி தவம் செய்து வரலானார். அதனால் ஈசான்ய ஞான தேசிகர் என்று இம்மகான் போற்றப்பட்டார்.

ஒரு முறை ஜில்லா கலெக்டராக இருந்த ஐடன் துரை என்ற ஆங்கிலேயர் மகான் ஞானதேசிகரின் மகிமையை கேள்விப் பட்டு தான் படும் காசநோய் அவஸ்தையை குணப்படுத்தும் படி அவரை தரிசித்து வேண்டிக்கொண்டார். மகானின் அருளால் ஐடன் துரை பூரணமாக குணமடைந்தார். பின், ஐடன் துரை மகானிடம் சென்று "தங்களுக்கு எவ்வளவு நிலம் வேண்டு மென" கேட்க, அவரும், "அப்பா எனக்கு எதுவும் வேண்டாம்" என்று கூறிவிட்டு, அதோ அவருக்கு எழுதி வையுங்கள் என அண்ணாமலையாரை நோக்கி கை நீட்டினார்.

ஐடன் துரை உடனே, தன்னிடம் உள்ள நிலங்களையும், சொத்துக்களையும் ஸ்ரீ அருணாசலே சுவரர் ஆலயத்திற்கு அளித்ததுடன் பல உற்சவங்களையும் முன்னின்று நடத்தினார். மற்றும் மகான் ஞானதேசிகரின் தலையாய சீடர்களுள் ஒருவராக மாறினார். அப்படி ஒருநாள், அண்ணாமலையாரின் உற்சவத்தை பார்க்க மிக ஆவலோடு தனது குதிரையில் வந்து கொண்டிருந்தார் ஐடன் துரை.

பலத்த மழை பெய்ததினால் வரும் வழியில் பென்னை ஆற்றில் பெரும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றைக் கடந்து தான் திருவண்ணாமலைக்குச் செல்ல வேண்டும். ஆனால் பெருகிய வெள்ளத்தினால் ஆற்றைக் கடக்க இயலவில்லை. சற்று நேரம் யோசித்த துரை, 'சத்குரு நாதா, என் ஞானகுருவே நீயே உற்ற துணை!' என்று கூறிக் கொண்டே குதிரையுடன் ஆற்றில் இறங்கிவிட்டார்.

அவருடன் வந்தவர்களோ பயந்து போய் பின்வாங்கி விட்டனர். அதே சமயம், தியானத்தில் ஆழ்ந்திருந்த ஈசான்ய ஞான தேசிகர் தியானம் கலைந்து, தனது கையைச் சிறிது தென்புறமாகத் தாழ்த்திப் பின் உயர்த்தினார். அதை கண்ட பக்தர்களில் சிலர் ஆச்சர்யத்துடன் அவரிடம் அதற்கு காரணத்தைக் கேட்டனர். ஸ்ரீ ஞானதேசிகரோ



அதற்கு, 'நம் அடியவர் ஆற்றில் விழுந்தால் நாம் தான் காப்பாற்ற வேண்டும்!' என்று கூறி விட்டு, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

சில மணி நேரம் சென்றது. எந்த விதமான ஆபத்தும் இல்லாமல் ஐடன் துரை, மகானை வந்து சந்தித்து, கால்களில் வீழ்ந்து வணங்கினார். நடந்த சம்பவத்தைக் கேள்வியுற்ற பக்தர்கள் ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகரின் ஆற்றலையும், ஐடன் துரையின் குரு பக்தியையும் கண்டு வியந்தனர்.

அண்ணா மலையைச் சேர்ந்த அருணாசலம் செட்டியார் என்பவருக்கு, நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லாமலிருந்தது. அவர் ஒருமுறை மகானை தரிசித்தார், மகானும் அவருக்கு அருளாசி கூறி சிறிதளவு விபூதியை ஒரு சிறிய பையில் போட்டு கொடுத்தார். மகானின் அருளால் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். பின் அக்குழந்தைக்கு முருகப்பர் என பெயர் சூட்டினார். அருணாசலம் செட்டியாரின் பரம்பரையில் வந்த அவரின் குடும்பத்தார், இன்றைக்கும் தேசிகர் அளித்த விபூதிப் பையை வீட்டில் வைத்து வணங்கி வருகின்றனர்.

மற்றும் புதுப்பாளையம் நாயக்கரின் சூலை நோய், மகான் தன் அருளால் குணமாக்கினார். இதே போல பலப்பல அற்புதங்கள். பின்னாளில், அண்ணாமலையாரின் அருள் வாக்குப்படி, ஈசான்ய மூலைக்கு வந்து சேர்ந்த

மகான் ஸ்ரீஞானதேசிகர். அங்கிருந்த குளக்கரையில் இருந்த பெரிய ஆலமரத்தின் கீழ் தனது தவத்தினை தொடர்ந்தார். இவரது தவத்திற்கு ஊறு நேராமல் காப்பதற்காக அண்ணாமலையாரும் உண்ணாமுலை யம்மனும் புலி உருவில் வந்து இவரைக் காவல் காத்தனர் என்பது வரலாறு.

அவற்றை 'அண்ணாமலை அரசே, உண்ணாமுலை அம்மையே' என்று அழைப்பாராம் மகான். பக்தர்கள் வந்தால் அப்புலிகள் தாமாகவே அவ்விடம் விட்டு நீங்கி விடும். சில சமயம் ஞானதேசிகரும் அப்புலிகளை அன்புடன் தடவிக் கொடுத்து, அவ்விடத்திலிருந்து போகச் சொல்வார். இதனால் ஞானதேசிகரின் பெருமை பல இடங்களிலும் பரவியது. இவரது பெருமை யைக் கேள்வியுற்று பலரும் அவரை நாடி வந்தனர். மகானும் தன் தவ வலிமையால் தம்மை நாடி வந்த பல பக்தர் களுக்கும், அன்பர்களுக்கும் அவர்களின் துன்பங்களை நீக்கியும், நோய்களைப் போக்கியும் அருள் பாலித்து வந்தார்.

திருவண்ணாமலையை விட்டு வேறு எங்கும் செல்லாது மலையின் ஈசான்ய திசையில் பல ஆண்டு காலங்கள் தவம் செய்து கொண்டும், தமது சீடர்கள் பலருக்கும் வேதபாடங்களும் கற்றுக்கொடுத்தும் வந்தார். தன்னுடைய இறுதிக் காலத்தினை உணர்ந்து தாம் சமாதி ஆகும் காலத்தை ஒரு ஓலையில் எழுதி தமது ஆசனத்தின் கீழ் வைத்திருந்தார்.



குறித்த நாளில், இம்மகான் 1829 ஆம் ஆண்டு, விரோதி வருடம் மார்கழி மாதம் இருபத்து ஆறாம் நாள் குருவாரம், மிருக சீரிட நட்சத்திரத்தில் பத்மாசனத் தில் சின்முத்திரை காட்டியபடி, உட்கார்ந்த நிலையில் மகா சமாதி அடைந்தார். அவர் தினமும் ஆசிரமம் பக்கத்திலுள்ள வில்வ மரத்தடியில் நின்று அண்ணாமலையாரை தரிசிப்பது வழக்கம். அந்த இடத்திலேயே அவருக்கு அவரின் சீடர்கள் சமாதி அமைத்தனர்.

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் ஈசான்ய லிங்கத்திற்கு எதிரில், ஸ்ரீ அம்மணி அம்மாள் சமாதி கோயிலை அடுத்துள்ள ஈசான்ய குளக்கரையில் ஸ்ரீஞான தேசிகரின் ஜீவசமாதி உள்ளது. இவ்விடத்தினை வேட்டவலம்


ஜமீன்தார் குடும்பத்தார் ஒரு மடமாக கட்டினார்கள். இதனை ஈசான்ய மடம் என்கிறார்கள். மகான் ஸ்ரீ ரமண மகரிஷி உட்பட பல மகான்களால் புகழப் பெற்ற இந்த ஸ்ரீ ஈசான ஞான தேசிகர் மடம், அளவற்ற ஆன்ம அமைதியையும், அற்புத ஆற்றல்களை தரக் கூடியது.

இங்கு தினசரி வழிபாடுகள், மற்றும் பௌர்ணமி தின வழிபாடுகள் நடைபெறுகின்றன. தீபத் திருவிழாவின் போது இங்கு தீபமேற்றி வழிபடுவது மிகப் புண்ணியமாகும். மலை உச்சியில் ஏற்றப்படும் கார்த்திகை மகா தீபத்திற்கு இந்த மடத்திலிருந்து பிரத்தியேகமாக நெய் வழங்கப்படுகிறது. உள்ளம் உருகி வேண்டுவோருக்கு, எண்ணம் போல வரம் தரும் ஈசான்ய தேசிகர், குழந்தைப் பேறு இல்லாத தம்பதிகளுக்கு மக்கட் செல்வம் அருள்வது இன்றும் நாம் கண்கூடாகக் காணக்கூடிய நிகழ்ச்சி ஆகும்.

ஈசான்ய தேசிகர் கோரக்கநாதர் குளக்கரையில், ஸ்ரீ அண்ணாமலையாரை தரிசித்து, தோத்திரப்பாமாலை, திருவண்ணாமலை வெண்பா, அண்ணாமலையார் வெண்பா, போன்ற பாக்களை இயற்றியருளினார். பக்தர்கள் வாய் பிருக்கும் போது திருவண்ணாமலை சென்று, மகான் ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகரின் ஜீவசமாதியை தரிசித்து அருளினைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

●

நமது தவறு



பிறரை குறை கூறுவதாலோ, வெறுப்பதாலோ ஒரு பயனுமில்லை. உங்களுக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றால், நீங்கள் அவரருகில் செல்ல வேண்டியதில்லை. ஆனால் அவருக்கு பிரட்சனைகள் உண்டாக் கவோ, அல்லது அவரைத் தூற்றவோ கூடாது.

நீங்கள் ஒருவரை சரியாகப் புரிந்து கொண்டால் அவரை விரும்பு வதில் கஷ்டம் இருக்காது. நீங்கள் ஒருவரை வெறுத்தால் அது உங்களு டைய தவறு. ஏனெனில் உங்களுக்கு புரிந்து கொள்ளும் சக்தி இல்லை. ஒருவேளை அவர் தவறானவராகக் கூட இருக்கலாம். அவரின் மீது வெறுப்பு காட்டியதால் நீங்களும் தவறானவரே!

ஒருவருக்கு உங்களால் உதவ முடியா விட்டாலும் அவரை வெறுக் காமலாவது இருக்கலாம். ஒருவரை வெறுப்பதற்கு பதிலாக அவரை புரிந்து கொள்ள முயற்சித்தால் அவரின் தவறுகள் உங்களுக்கு தெரியக்கூடும். நீங்கள் உண்மையிலேயே நீங்கள் நினைப்பதைப் போன்று அவ்வளவு நல்லவராக இருந்தால் சத்தியமாக அவரை வெறுக்க மாட்டீர்கள். மாறாக அவருக்கு உதவி செய்வீர்கள்.



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம்

14

ஸ்ரீ ரமண மகரிஷி பின் வரும் பாடலில் அறிவின் முக்கியத்துவத்தையும், ஞானத்தின் பெருமையையும் மிகஅழகாக விளக்குகின்றார்.

அறிவொன்றே நேர்முக்தி சாதன மாகும்
பிறசா தனங்களின் பேரு – மருவின்றி
யாகாது முக்தியுற லக்கினியின் றிப்பாக
மாகாத வாறென் றறி.

எளிய கருத்து: சாதனங்களில் லெல்லாம் ஆத்மஞானமாகிய அறிவே மோட்சத்திற்கான ஒரே சாதனமாகும். சமையலுக்கு எப்படி நெருப்பில்லாமல் பிரயோஜன மில்லையோ, அதுபோல ஆத்ம ஞானம் இல்லாமல் மோட்சமானது கிட்டாது.

மோட்சம் பெற ஆத்மஞான மானது மிகவும் அவசியமாகிறது. கர்மம், பக்தி, யக்ஞம் செய்தல், தானம் அளித்தல், ஆன்மீக





நாராயணன்

பெருவாழ்வு எனப்படுவது நிலையான, அமைதியான, சஞ்சலமற்ற, பயமில்லா, மகிழ்ச்சியான மௌனம் அதாவது, எண்ணங்களற்ற, எண்ணங்கள் ஒடுக்கப்பட்ட நிலை.

ஆத்மஞானம் பெறுவதற்கு உதவிபுரியும் இன்றியமையாத சாதனங்களை நான்குவகையாகப் பிரிக்கலாம். 1. பரம்பரா சாதனம், 2. பகிரங்க சாதனம், 3. அந்தரங்க சாதனம், 4. சாக்ஷாத் சாதனம்.

யக்ஞம், தானம், அர்ச்சா அபிஷேகம் போன்றவை பரம்பரா சாதனத்தில் அடங்குபவை. விவேகம், வைராக்கியம், அஷ்டாங்க யோகம் போன்றவை பகிரங்க சாதனத்தில் அடங்குபவை. சிரவணம், மனனம், நிதித்யாஸனம் (ஒருவகையான ஆழ்நிலை தியானம்) போன்றவை அந்தரங்க சாதனையில் அடங்குபவை.

சாக்ஷாத் சாதனம் என்பது நேரடி சாதனம், அதுதான் ஆத்ம ஞானம் ஆகும். நமது நிஜசொரூபத்தை பற்றி உணர்தலே ஆத்ம ஞானமாகும். இதுதான், மேற்கூறிய அனைத்திலும் மோட்சத்தை அடைவதற்கான நேரடியான சாதனமாகும். ஏனையவையாவும், ஒருவகையில் ஆன்மீக முன்னேற்றத்திற்குத் துணை புரிபவை ஆனால், அவை நேரடி சாதனமாகாது.

மனது பக்குவமடைந்தால் புலன்கள் கட்டுப்பாட்டில் இயங்கும். புலன்கள் கட்டுப்பாட்டில்

நூல்களை படித்தல் இவையெல்லாம் நம் மனதினை தூய்மைப்படுத்தி மாசுக்களை நீக்கும். ஆனால், மோட்சத்தை நல்கா, அதனை நெறிப்படுத்தி மோட்சத்தை நல்குவது ஆத்மஞானமேயாகும்.

எளிய உதாரணமாக, சமையலுக்கு காய்கறி, பருப்பு, அரிசி, உப்பு, மிளகாய் என பல்வேறு பொருட்கள் இருந்த போதிலும் அதனை பக்குவப்படுத்தி உயிர்வாழ உணவாய் நல்குவது நெருப்பேயாகும். இங்கு நெருப்பு போல் ஞானமே நம்மை பக்குவப்படுத்தி மரணமில்லா பெருவாழ்வு நல்கும். மரணமில்லா

இயங்கினால் உணர்வுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். உணர்வுகள் கட்டுப்பாட்டில் இருக்கும் மனிதனுக்கு தவமும், மௌனமும் கைவசப்படும். அவன் எப்பொழுதும் புன்சிரிப்புடன் சாந்தமாக இருப்பான். எத்தகைய சிக்கல்களையும் பக்குவமாக, பரபரப்பில்லாமல் நிதானமாக கையாண்டு வெற்றிபெறும் திறன் பெற்றிருப்பான். உணர்வுகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒருவனுக்கு தீமைகள் அண்டாது. நல்ல ஆயுள் விருத்தியும், ஆரோக்கியமும் நிரம்பப் பெற்றவனாக இருப்பான்.

இவ்வாறு, ஹேமலேகை கூறிய வார்த்தைகளைக்கேட்ட ஹேமசூடன் – "பிரியமானவளே, இளம்பெண்ணாகிய நீ பேசும் ஞானவார்த்தைகள் எனக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்துகின்றது. வயதிலும், அனுபவத்திலும் முதிராதவளான உன் வார்த்தைகளை எப்படி நம்புவது? பிரமாணம் ஏது? உன்னுடைய வார்த்தைகளானது ஆகாயத்தின் மேகக்கூட்டத்தின் நடுவிலே தோன்றும் சித்திரம்போன்று ஆதாரமற்றவைகளாக எனக்குத் தோன்றுகின்றது" – என்று கூறினான்.

இராஜகுமாரரே! தவசீலர்கள் சொல்லிய வார்த்தைகள் எப்படிப் பொய்யாகும்? நான் சொன்னவையனைத்தும் தவசீலர்களின் உண்மை மொழிகள், அது எப்படி அபத்தமாகும்? சத்யசீலர்களான தவசிகள் பொய்யுரைக்க மாட்டார்கள், எவனொருவன் ஆத்மஞான விஷயத்தில் பொய்யுரைத்து அநாத்ம சங்கதிகளை கூறுகின்றானோ, அவன் மேலோகத்திலும், வாழும் இந்த உலகத்திலும் நன்மையை அடைவதில்லை என்பது சத்தியம்.

ஒருவன் கண்நோய்க்கு மருந்தை அறிவதானால் மட்டும் அவனது நோயானது குணமடைவதில்லை. மருந்தை கூறிய மருத்துவனை நம்பி அதனை கண்ணில் தடவினால் மட்டுமே, நோயானது படிப்படியாக குறைந்து குணமாகும். இவ்வுதாரணத்தை ஒத்து, நம்பிக்கைக்குரியவர்களின் வார்த்தையை நம்பி அதனை ஏற்கவேண்டும்.

உங்களிடம் பொய்க்கூறுவதினால் எனக்கென இலாபம்? ஒருவன் நம்பிக்கை என்ற தாயைப் பணிவதினால் மட்டுமே எல்லாவித சந்தேகம் மற்றும் பயத்தினிலிருந்து விடுபடமுடியும். தன் தாயிடம் விசுவாசமில்லாத குழந்தை எப்படி உலகில் ஜீவித்திருக்கமுடியும்? அதுபோல, மனைவியிடம் நம்பிக்கையில்லாத மனிதன் எப்படி சுகத்தை அனுபவிக்க முடியும்? நம்பிக்கையில்லாத எந்தவொரு செயலும் சரியானவகையில் நடைபெறாது என்றாள் ஹேமலேகை.

அன்பிற்குரியவளே! நீ சொல்வதைப்போல நம்பிக்கையை வளர்க்கவேண்டுமென்றால் அது சத்துக்களான சாதுக்களிடம் வைக்கவேண்டும். அசத்துக்களான மூடர்களிடமும், பெண்களிடமும் எப்படி வைப்பது? இவர்களிடம் வைக்கும் நம்பிக்கையானது தூண்டிலின் வெளிப்புற அழகைக் கண்டு மயங்கி ஊசிமுனையில் சிக்கிக்கொள்ளும் மீன்களின் நிலைபோல அதோகதிதான்



ஏற்படும், அவர்களின் நம்பகத் தன்மையினை உறுதிசெய்து கொள்ள வேண்டாமா? என்றான் ஹேமசூடன்.

இவ்வார்த்தைகளை கேட்ட ஹேமலேகை, உண்மையான சத்துக்களை அடையாளம் கண்டு, அவர்களிடம் சங்கமம் வைத்தல், விசாரம் மேற்கொள்ளல், இவையாவும் மற்றவர்கள் கூறுவதை வைத்தோ அல்லது சாஸ்திரங்களில் கூறப்பட்ட பிரமாணங்களை வைத்தோ ஏற்பட்டது என்றால், அதில் எது சத்து, எது அசத்து என்று எப்படி நம்புவது? இது முடிவில்லாத வாதத்திலேயே முடியும். ஒருவித தீர்மானமும் ஏற்படாது.

ஒருவனுக்கு திடமான நம்பிக்கை இல்லாதபொழுது, அவன் தவசீலர்களும், சாஸ்திரங்கள் சொல்லும் பிராமணத்திலும் மட்டும் எப்படி அவனுக்கு நம்பிக்கை ஏற்படும். அதிலும் அவனுக்கு சந்தேகங்கள் எழுமே தவிர நம்பிக்கை உண்டாகாது. இராஜகுமாரரே! வீண்விவாதம் செய்பவர்களுக்கு ஒருகாலத்திலும் மேன்மையென்பது ஏற்படாது. ஒன்றை நன்றாக நினைவுகொள்ளுங்கள், இந்த உலகம் முழுவதுமே நம்பிக்கை என்னும் சக்கரத்தில் தான் ஓடுகிறது. நாளை நாம் கண்விழிப்போம் என்ற நம்பிக்கையே நமது வேலைகளை சரிவர இன்று செய்யவைக்கின்றது.

அரசே! நம்பிக்கை என்பது துடுப்பு, வாழ்க்கை என்ற படகில் பயணம் செய்ய, சரியான திசையில் படகை திருப்ப நம்பிக்கை என்ற துடுப்பு முக்கியமாகும். முற் காலத்தில், கோதாவரி நதிதீரத்தில் சகியமலை என்ற இடத்தில் குருகுலம் ஒன்று இருந்தது. அங்கே கௌசிகர் என்ற மாமுனிவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அந்த குருகுலத்தில் அநேக சிஷ்யர்கள் இருந்தனர். அவர்கள் ஒருநாள், குருநாதர் இல்லாத சமயத்தில் தங்களுக்குள் உலகநிலைதனை தத்தம் அறிவுக்கு எட்டியவாறு

விவாதம் செய்தனர்.

அவர்களில் வீண்விவாதத்திலும், குறுக்குப் புத்தியிலும் பெயர்பெற்ற சுங்கன் என்ற சிஷ்யன் இருந்தான். அவனுக்கு அனுபவ அறிவு இல்லாத போதும்,வறட்டு வாதத்தினால் சகசிஷ்யர்களின் கருத்துக்கு மாறாகவே தனது கருத்தை பதிவு செய்தான். சாஸ்திரங்கள் கூறும் பிரமாணங்கள்யாவும் பொய் யானவையே என்றுரைத்தான்.

அதற்கு உதாரணமாக சாஸ்திரங் களில் நியாயப்படுத்தி ஒன்றை சொல்லி அதையே வேறிடத்தில் மற்றொரு பிரமாணத்தை கொண்டு மறுப்பதை சுட்டிக்காட்டி, இப்படியிருப்பதினால் அறிவின் உண்மைத்தன்மையை அறிய முடியாது என்று கூறி சாஸ்திரங்கள் பொய்யென்றுரைத்தான். இப்படி நாம் தீரவிசாரித்தே சென்றோ மானால் இறுதியில் மிஞ்சுவது சூன்யம் மட்டுமே, இதனால் சூன்யம் மட்டுமே உண்மைத்தன்மை கொண்டுள்ளது என்றான் சுங்கன் என்ற சிஷ்யன்.

இவனின் இந்த வாதத்தினை அனுசரித்த சில மூடசிஷ்யர்கள் சூன்யமே எல்லாம் என்று நம்பி நாசமாயினர். அறிவுள்ள சிஷ்யர் கள் குருவின் வருகைக்காக காத்திருந்து அவரிடமிருந்து உண்மைப்பொருளை, அறிவின் உண்மைநிலையினை உணர்ந்து நற்கதியடைந்தனர். ஆகவே, முடிவில்லாத வீண்பிடிவாதத்தை விட்டு சாஸ்திரங்களை பகுத் தறிவின் மூலமாக விசாரம் செய்து தெளிவடையவேண்டும். இது தெளிந்த ஞானத்தால் மட்டுமே நிகழும் என்றாள் ஹேமலேகை.

அமைதியாக கவனத்துடன் கேட்ட ஹேமசூடன், "பிரியமான வளே! உன்னிடம் இவ்வளவு அறிவின் தெளிவுயிருப்பதை நான் உணரவில்லை. நான் மிகவும் தன்யனானேன். நம்பிக்கையினால் சகல நலனும் சித்தியாகும் என்றாய், நீ கூறிய கதையில் வந்ததைபோன்று ஒன்றுக் கொன்று முரணான ஆகமசாஸ்திரங்கள் உள்ளனவே! இதில் எதனிடத்தில் நம்பிக்கை வைக்கலாம்? எதனிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது?

ஆச்சார்யர்களின் கருத்துக் கள், மதங்களின் கோட்பாடுகள், மாறுபட்ட சிந்தனைகள், சாஸ்திரத் திற்கு உரை யெழுதியவர்களின் எதிர்மறை கருத்துக்கள், இதனில் எதை எடுத்துக் கொள்ளத்தக்கது? எது தள்ளத்தக்கது? என்று எனக்கு கூறுவாயாக. மேலும் அபிமானம் உள்ளயிடத்தில், அதை நல்ல தென்றும், இல்லதாயிடத் தில் குற்றமுடையது என்றும் சொல்லுவோரே இவ்வுலகத்தில் அதிகம். அவர்கள் சூன்யவாதி களுக்கே ஆதரவாகவும், அதற்கு அனுகூலமான ஆகமங்களும் இருக்கத்தானே செய்கின்றது?" என்றான் ஹேமசூடன்.

எந்த செயல்களும் அறியா மைக்கு எதிரியுமல்ல, அவையெது வும் அறியாமையைத் தீர்க்காது. எப்படி ஒளியானது இருளை நீக்கு கிறதோ, அதுபோல ஞானமாகிய அறிவு மட்டுமே அறியாமையைப் போக்கும். என்று பதில் கூற ஆரம்பித்தாள் ஹேமலேகை.

(தொடரும்)

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்
இனிய மொழிகள்

01.04.26

இவ்வுலகத்தில் இருக்கும் அனைத்தும் அறியப்படுபவை. நீ அவைகளை அறியும் அறிவு. அறிபவன் இன்னொன்றால் அறியப்படுவது இல்லை என்பதை அறிவாயாக!

02.04.26

நீ உன் உடலை இது எனது உடல் என்று அறிவதால் நீ உடல் அல்ல! அப்படியானால் நீ யார்? நீ உடலை அறிந்து கொண்ட அறிவு. அதுவே சாட்சி. எனவே சாட்சியாய் இரு!

03.04.26

நீ குருவிடம் இருந்து பெற்ற சாதனத்தை தொடர்ந்து பழகிவர வேண்டும். அப்போதுதான் உனக்கு அமைதியும், நிம்மதியும் கிட்டும். இல்லை என்றால் உனது பழைய புத்தி, நீ பெற்ற புதிய புத்தியை வேலை செய்யவிடாது.

04.04.26

நீ ஆன்மா என்று அறிந்து கொள்வதற்கு எந்த கஷ்டமும் படவேண்டாம். உனக்கு குருவின் மீது நம்பிக்கை இருப்பின் குரு நீ ஆன்மா என்று கூறினால் நம்ப வேண்டியதுதானே! இல்லை என்றால் குரு மீது இருக்கும் நம்பிக்கை வீணே.

05.04.26

எவன் காண்கின்றானோ அவனது அறிவின் பொருட்டே கடவுள்களும், கதைகளும் அவை கண்ணாடியில் பிரதிபலிக்கும். தோற்றம் போன்றதே! உண்மை என்பது பரமாத்மா ஒன்றே!

06.04.26

நானும், நீயும் இரண்டு என்ற துவைத அறிவே துக்கங்களின் மூல வேர். அதற்கு, நான் சுத்த ஞான வடிவான ஆத்மா என்றறிவதைத் தவிர வேறு மருந்தில்லை.

07.04.26

குருவின் வார்த்தைகளை ஆராய்ச்சி செய்பவன் தன் ஆன்மீக முன்னேற்றத்தை தானே

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

தடுத்துக்கொள்கின்றான். குருவின் வார்த்தைகளுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்பவனே தன்னை அறிகின்றான்.

08.04.26

இந்த உலகத்தில் கடவுள் உட்பட நீ எதைத் தேடினாலும் ஓர் நாள் களைத்துவிடுவாய்! அப்போதுதான் புரியும் நீ தேடியது மட்டுமே உண்மை! கிடைத்தது அனைத்தும் பொய் என்று.

09.04.26

இந்த உலகத்தின் அனைத்து இன்ப துன்பங்களையும் அனுபவி யுங்கள். ஆனால் அனுபவித்தவன் நான் அல்ல என்று உணருங்கள் அதுவே முக்தி!

10.04.26

இறைவன் சூப்பர் மார்க்கெட் அல்ல! நீங்கள் கேட்டதெல்லாம் கிடைப்பதற்கு. கேட்டது கிடைத்தால் அதன் பெயர் துக்கம். கிடைப்பதை பெற்றுக்கொள்ளுங்கள். அதுவே ஆனந்தம்.

11.04.26

பிரார்த்தனைக்காக ஆலயம் செல்லும் அனைவருமே பிச்சைக்காரர்களே! நன்றி சொல்ல ஆலயம் செல்பவரே செல்வந்தர்!

12.04.26

எனக்கு தகுதி இருக்கின்றது என்று நீங்கள் எண்ணும்வரை நீங்கள் தகுதியற்றவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

13.04.26

அனுபவம் என்ற சகதியில் இருந்துதான் தாமரை என்ற மலர் மலர்ந்திட வேண்டும். எனவே வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கண்டு துவளாதீர்கள்! அனைத் தையும் அனுபவியுங்கள்.

14.04.26

உங்களது வாழ்க்கையில் எதை ஒன்றையும் இழப்பதற்காக கவலைப் படாதீர்கள். நீங்கள் இழப்பது கூழாங்கல்லாகக்கூட இருக்கலாம்.

15.04.26

நீங்கள் ஆனந்தமாக இருக்கும் போது, இவ்வுலகில் அநேகம்பேர் துன்பத்தில் இருக்கின்றார்கள் என்பதை நினைவில் கொண்டால் உங்கள் ஆனந்தம் உண்மையானதாக இருக்கும்.

16.04.26

எல்லாவற்றிற்கும் சந்தேகப்படு பவர்கள் ஒருபோதும் தியாகம் செய்வதில்லை. ஆகவே அவர் களுக்கு தியானம் ஒரு போதும் கைகூடுவதில்லை.

17.04.26

ஆசைகளை தூண்டிவிட்டு அதை அடைவதல்ல வைராக்கியம். ஆசையையே அறுத்துவிடுவதே வைராக்கியம்.

18.04.26

எல்லோரும், எல்லாமும் உன்னை விலக்கினால் அது தனிமை. எல்லோரையும், எல்லாவற்றையும் நீ விலக்கினால் அது ஏகாந்தம்.

19.04.26

உணர்வுப்பூர்வமாக எடுத்த முடிவுகள் உலகத்தில் நிலைத்த தில்லை. அறிவுப்பூர்வமான முடிவுகளே ஆண்டாண்டு காலமாய் நிலைத்து நிற்கின்றன.

20.04.26

செல்வம் நிலையற்றது

மட்டுமல்ல! அர்த்தமற்றது. செல்வம் சந்தேகத்தை வளர்க்கும். நிம்மதியை கெடுக்கும். பெற்ற மக்களிடம் கூட விரோதத்தை வளர்க்கும்.

21.04.26

சன்னலில் இருந்து ஆகாயத்தைப் பார்த்தால் ஆகாயம் சன்னல் அளவே தெரியும். முழு ஆகாயத்தையும் காண வேண்டும் என்றால் சன்னலை மாற்றிப் பயனில்லை. நீங்கள்தான் மாறவேண்டும்.

22.04.26

எல்லா இடங்களிலும் தன்னை முன்னிலைப்படுத்த வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒருபோதும் எந்த ஒன்றிலும் திருப்தி அடைவதில்லை.

23.04.26

எல்லாம் மிகச்சரியாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களின் செய்கைகளில் குறைகள் இருந்து கொண்டே இருக்கும்.

24.04.26

ஒளி மிகுந்த நட்சத்திரங்களைக் காண இருட்டு வேண்டும். அதுபோல வலி நீங்கிய வாழ்க்கை வாழ துன்பம் என்ற அனுபவம் வேண்டும்.

25.04.26

ஆன்மீகம் என்பது ஆலயம் சென்று தேங்காய் பழம் உடைத்து பூஜை செய்வதல்ல, ஆன்மீகம் என்பது முழுக்க, முழுக்க நான் யார் என்பதை அறிய வேண்டி செய்யும் பயிற்சியாகும்.

26.04.26

தேவையற்ற விசயங்களில் கவனத்தை செலுத்தி உங்களது சக்தியை வீணடிக்காதீர்கள். உங்களைச்சுற்றி நல்லதே நடக்கின்றது என்று நேர்மறையாக எண்ணுங்கள். உங்களது சக்தி சேமிக்கப்படும்.

27.04.26

உங்களைச்சுற்றி நடைபெறும் எல்லா காரியங்களையும் நீங்கள் மனப்பூர்வமாக நம்பினீர்கள் என்றால் பொய்யானது உங்களை விட்டு விலகும். உண்மையானது உங்களைவிட்டு ஒருபோதும் விலகாது.

28.04.26

அறிவு இருவகைப்படும், அறிவு, மெய்யறிவு. அறிவு அனைத்தையும் சந்தேகிக்கும், வாதம் செய்யும். மெய்யறிவு அதில் உள்ள சத்தியத்தை புரிந்து கொண்டு மௌனம் காக்கும். எனவே அறிவு இருந்தும் பயனில்லை.

29.04.26

இருளை இருள் என்று அறியாதவன் வெளிச்சத்தை தேட மாட்டான். தன்னை அஞ்ஞானி என்று உணராதவன் ஒரு போதும் ஞானத்தை தேட மாட்டான்.

30.04.26

கணவன், மனைவி இருவரும் எத்தனை சாதித்தாலும் எவ்வளவு சம்பாதித்தாலும், ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்கிறோம் என்ற உணர்வை இருவருமே புரிந்து கொண்டால்தான் இனிய இல்லறமாகும்.

31.04.26

ஆனந்தத்தை தேடி ஓடுபவன் ஆனந்தத்தை ஒருபோதும் அடைய முடியாது. ஏனெனில் தேடுதலே அவனது ஆனந்தத்தை தடுத்துவிடும். தான் தேடும் ஆனந்தம் தானே என்பதை அறிவதவன் ஆனந்தத்தை தேடுவதில்லை. ●

சங்கர் மகாராஜ் சரிதம்



மகராஜ் அகமது நகருக்கு அடிக்கடி வந்து தங்கும் வழக்கம் கொண்டிருந்தார். அங்கு அவருக்கு அப்பா மட்டுமல்லாமல் பல சிஷ்யர்கள் இருந்தார்கள். குறிப்பாக, ஷ்ரோத்ரி, பார்க்கே, கார்கனிஸ், ஜனுபாவ் மிரிக்கர், ஷேக் ஹுசைன் என்கிற இஸ்லாமியர் போன்றவர்கள். மகராஜ் மிரிக்கர் அல்லது தானேஸ்வருடைய வீட்டில் மட்டும்தான் தங்குவார். அவர் இவ்வளவு நாட்கள்தான் தங்குவார் என்றெல்லாம் குறிப் பிட்டு சொல்ல முடியாது. சில சமயம் நாட்கணக்கில் தங்குவார், சில சமயம் மாதக்கணக்கில் தங்குவார்.

ஸ்ரீ சங்கர் மகராஜும் சீரடி சாயிநாதரும் சமகாலத்தவர்கள். மிரிக்கர் அவர்களுக்கு சீரடி சாயி பாபாவுடனும் தொடர்பு இருந்தது. மகராஜ் அப்பாவுடைய வீட்டுக்கு வந்திருக்கிறார் என்ற செய்தி கிடைத்த உடன் அவருடைய மற்ற சிஷ்யர்கள் மகராஜை தரிசனம் செய்வதற்காக அப்பாவுடைய வீட்டுக்கு வந்துவிடுவார்கள்.

அப்பாவுடைய வீட்டு வரவேற்பறையில் அனைவரும் வந்து மகராஜுடன் சம்பாஷணை செய்வார்கள். அந்த சமயங்களில் எல்லாம் அப்பாவுக்கு வைத்திய சாலைக்கு கிளம்ப சற்று தயக்கமாக இருக்கும். அவர் அவ்வாறு யோசிக்க துவங்குவதற்கு முன்னரே மகராஜ் அப்பாவை அழைத்து, "உனக்கு வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் அல்லவா! நீ முதலில் கிளம்பு, அதுதான் முக்கியம்" என்று கூறி அனுப்பிவிடுவார். குரு வீட்டில் இருக்க, அவருக்கு சேவை செய்வது தானே நம் முதல் கடமையாக இருக்க வேண்டும் என்பது ஒரு சிஷ்யரின் விருப்பமாக இருக்கும். ஆனால் மகராஜ் குருவுக்கு சேவை செய்வதைக்காட்டிலும், நம் கர்ம யோகத்தை சரியாக கடை பிடித்தாலே அது குரு சேவையை விட உயர்ந்தது என்று கூறி அப்பாவை அனுப்பி விடுவார்.

அப்பா தன்னுடைய வேலை முடிந்து இரவு வீட்டுக்கு வந்ததும், அவருடன் இரவு உணவுக்கு பின்னர் மகராஜ் பல மணி நேரங்கள் உரையாடுவார். சில சமயம் அந்த

உரையாடல் வார்த்தை பரிமாற்றம் இல்லாமல் கூட இருக்கும். ஒரு சிஷ்யன் குருவிடமிருந்து வாய் மொழியாகவோ செல் மூலமாகவோத்தான் உபதேசம் பெற வேண்டும் என்கிற அவசியமில்லை. குருவுக்கு அருகில் அமர்ந்து கொண்டு அவரை அமைதியாக கவனித்தாலே போதும். அவர் நமக்கு அனைத்து உபதேசங்களையும் கடத்தி விடுவார் என்பதை இந்த இடத்தில் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஒருமுறை மகராஜ் அகமது நகரில் ஆறு மாத காலம் தங்கி இருந்தார். அந்த சமயத்தில் அப்பாவுக்கு அனைத்து விதமான சித்திகளையும் கற்றுக் கொடுத்தார். மகராஜ் அவருக்கு சிறு வயது முதலே சித்திகளை கற்றுக்கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். மகராஜ் அவருக்கு ராம்கதி எனும் சித்தியை சிறுவயதாக இருக்கும் போது கற்றுக் கொடுத்ததை இங்கு நினைவு கொள்க. மகராஜ்



திருமதி. மாதங்கி பாலாஜி

கற்றுக்கொடுக்கும் சித்திகளில் அப்பா தேர்ச்சி பெற்றதும் மகராஜ் அவை அனைத்தும் பயனற்றது, இதற்கு மேல் இன்னும் இருக்கிறது என்று கூறுவார். சித்திகள் நம்மை தாழ்த்திவிடும், அவை முக்திக்கு அழைத்து செல்லாது என்பதை சூசகமாக கூறுகிறார். அதாவது 'களவும் கற்று மற' என்பதை மகராஜ் இவ்விடத்தில் போதிக்கிறார்.

அப்பா சில சித்திகளை ஒரு வாரத்தில் கற்றுக்கொள்வார். சிலவற்றை கற்றுக் கொள்ள மாதக் கணக்காகும். ஆனால் எந்தவித கேள்வியும் கேட்காமல் கற்றுக் கொள்வார். குரு சொல்லை தட்டாத சிஷ்யராக அவர் விளங்கினார். மகராஜ் ஆத்மஞானத்தை போதித்ததால், தன் சிஷ்யர்கள் சித்திகள் மூலம் பயனடைவதை விட கர்மாக்களை அனுபவித்துதான் கழிக்க வேண்டும் என்பதையே விரும்பினார்.


மகராஜ் அப்பாவை தியானேஸ்வரியை ஆழமாக படிக்கச் சொல்லி, அதன் கருத்துக்களை புரிய வைத்தார். அப்பாவுக்கு ஒரு ஓவி அல்லது ஒரு ஸ்லோகத்தை புரிந்து கொள்ள ஒரு நாள் ஆகும். ஒரு சில சமயம் பல நாட்கள் கூட ஆகும். ஸ்லோகங்கள் புரியாத போது, மகராஜ் அவருக்கு அவற்றை எளிமையாக விளக்கி புரிய வைத்துவிடுவார்.

இவ்வாறு மகராஜ் அப்பாவுடைய கைகளை பிடித்து கொண்டு ஆன்மீகத்தில் அவரை முன்னேற வைத்தார். குருவுக்குத்தான் தன் சிஷ்யர்களின் மீது எவ்வளவு கருணை! சித்திகளுக்கு ஒரு குணம்

உண்டு. சித்திகளை பிரயோகப் படுத்தவில்லை என்றாலும், அவை சில சமயம் தானாகவே நம் மூலம் வெளிப்படும். அவற்றை நாம் பகுத்தறிந்து அதற்கு வலு சேர்க்காமல், தகர்த்து எறிய வேண்டும். அதை விளக்கும் வகையில் அப்பாவின் வாழ்க்கையில் ஒரு சம்பவம் நடைபெற்றது.

அப்பா தினமும் ஒரு பால கிருஷ்ண விக்கிரகத்தை வைத்து அதற்கு அபிஷேகம் ஆராதனைகள் செய்வார். மிகவும் ஆத்மார்த்தமாக அந்த விக்கிரகத்திற்கு அவர் பூஜை செய்வார் என்பதனால், அந்த விக்கிரகம் ஒரு நாள் அவருடன் பேசத் தொடங்கியது. சிறிது நாட்களுக்குப் பிறகு அந்த விக்கிரகத்தில் இருந்து பால கிருஷ்ணருடைய உருவம் வெளியே வர ஆரம்பித்தது. அந்த உருவம் வெளியே வந்து இவர் கொடுக்கும் பிரசாதத்தை சாப்பிட்டு விட்டு மீண்டும் அந்த விக்கிரகத்திற்கு உள்ளே ஐக்கியமாகும். தினமும் இதே மாதிரி நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

சராசரியான ஒரு பக்தருக்கு இது அனுக்கிரஹம் அல்லது அற்புதம் என்றுதான் தோன்றும். ஆனால் அப்பா மருத்துவம் படித்தவர், மேலும் மகராஜுடைய குருகுலத்தில் இருந்து வந்தவர் என்பதால் அவருக்கு இது அற்புதமாக தோன்றவில்லை. என்ன நடக்கிறது என்ற ஆராய்ச்சியில் அவர் இறங்கினார். அதாவது இதில் ஒளிந்திருக்கும் மெய்ஞானம் என்ன என்று தன் சிந்தனையை செலுத்தினார்.




ஒரு நாள் அந்த உருவத்தை சோதனை செய்து பார்த்து விட வேண்டும் என்கிற முடிவுடன், அவருக்கு முன்னால் தோன்றிய கிருஷ்ணரிடம், "நீ உண்மையாகவே வந்திருக்கிறாயா?" என்று கேட்டார். "நீ இன்னுமா என்னை நம்பவில்லை?" என்று பாலகிருஷ்ணர் கூறிவிட்டு, தன் கையில் இருந்த தங்க வளையலை கழட்டி இவர் வைத்திருந்த பிரசாத தட்டில் கிருஷ்ணர் வைத்தார். ஆனாலும் அப்பா அதில் திருப்தி அடையவில்லை. உண்மையான மெய்ஞான போதனைகளை பெற்ற சிஷ்யர் இப்படித்தானே இருப்பார்!

அப்பா மீண்டும் கிருஷ்ணரிடம், "நீங்கள் நிஜமாகவே வந்திருக்கிறீர்களா?" என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே இருந்தார். கிருஷ்ணரும், "ஆமாம்,

ஆமாம்" என்று கூறிவிட்டு அந்த விக்கிரகத்தினுள் ஐக்கியமாகி விட்டார். அப்பா மகராஜ் கூறிய போதனைகளை நினைவுபடுத்திப் பார்த்தார். இதில் என்னதான் நடக்கிறது என்பது அவருக்கு விளங்கி விடுகிறது.

அதாவது இந்த உருவம் தன்னுடைய ஆத்ம சக்தியால்தான் தோன்றி நிற்று என்பதை அவர் அறிந்து கொள்கிறார். ஒருமுகப்பட்ட மனது மிகவும் வலிமையானது. அதன் சக்தியைக் கொண்டு எதை வேண்டுமானாலும் உருவாக்கலாம் என்பதை அவர் உணர்ந்ததனால் இந்த உருவ வெளிப்பாட்டின் காரணத்தை அவர் அறிந்து கொண்டார். இதை உணர்ந்த அடுத்த நொடியே, தன் அகம்பாவத்தினால் தான் இந்த உருவம் தோன்றியிருக்கிறது



என்பதையும் அறிந்து கொள்கிறார். உடனே பல நாட்களாக பூஜை, ஆராதனை செய்த ஸ்ரீ கிருஷ்ணர் விக்ரஹத்தை எடுத்து சுக்குநூறாக உடைத்து ஜன்னல் வழியாக வெளியே தூக்கி எறிந்து விட்டார். ஆஹா! இவரல்லவோ உண்மையான ஆன்மீகவாதி!

அந்த சமயத்தில் மகராஜ் அவர் முன் வந்து, மிகுந்த சந்தோஷத்துடன் கைதட்டி, "டாக்டருடைய கடவுள் இறந்துவிட்டார்" என்று கூறிக் கொண்டே பலமாக சிரித்தார். அதாவது அப்பாவுடைய அகம்பாவம் முற்றிலுமாக அழிந்து விட்டது என்பதுதான் இதன் பொருள். ஒரு உண்மையான குரு, தன் சிஷ்யர்களின் அகம்பாவத்தை உடைத்து, நம்மை யார் என்று உணர வைத்து, நம்முள் இருக்கும் இறைவனை நமக்கு உணர்த்துவார். அவரே சத்குரு ஆவார். ஸ்ரீ சங்கர் மகராஜ் எனும் சத்குருவின் போதனைகள் எவ்வளவு தெளிவாக இருந்திருக்கிறது!

[இந்த குறிப்பிட்ட அத்தியாயத்தை நான் என் குருவான யோகி ஸ்ரீராம் பாபாவுக்கு சமர்ப்பணம் செய்கிறேன். நான் அவருடன் செய்த சம்பாஷணைகளும், அவர் சித்திகள் பற்றி அளித்த போதனைகளின் காரணமாகத்தான் என்னால் இந்த லீலையை எளிதாக புரிந்து கொண்டு விளக்க முடிந்தது. அவருடைய பாதார விந்தங்களை பணிந்து நமஸ்கரிக்கிறேன்.]

ஸ்ரீ சங்கர் மகராஜுக்கு ஜயம் உண்டாகட்டும்!!

தொடரும்



கொடுக்காய்புளி

கொடுக்காய் புளி எங்க பார்த்தாலும் விடாதீங்க, கொடுக்காய்ப்புளியில் மருத்துவ குணங்கள் பல நிறைந்துள்ளன. இந்த மரத்தின் இலைகள், காய்கள் மற்றும் பூக்கள் மாதவிடாய் காலத்தில் ஏற்படும் பிரச்சனை, ஆஸ்துமா போன்ற பல பிரச்சனை களுக்கும் நிவாரணியாக இருக்கிறது

கொடுக்காய்ப்புளியில் உள்ள சத்துக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, கோடைகாலங்களில் ஏற்படும் நோய்களை தடுக்கிறது. கொடுக்காய்ப் புளியில் வைட்டமின் சி, வைட்டமின் பி 1, பி 2, பி 3, வைட்டமின் கே, இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ், புரதம், சோடியம் மற்றும் வைட்டமின் ஏ ஆகிய ஊட்டச்சத்துகள் உள்ளது என ஒரு ஆய்வில் வழங்கப்பட்ட தரவுகள் கூறுகிறது.

சருமத்தில் ஏற்படும் தோல் அழற்சி, வீக்கம், அரிப்பு போன்ற வற்றிலிருந்து பாதுகாத்து சரும ஆரோக்கியத்தை பராமரிக்க உதவுகிறது. இதில் உள்ள வைட்டமின் சி, டானின்கள், சபோனின்கள், நமது உடலில் ஏற்படும் ஆக்சிஜனேற்றம் அழற்சி எதிர்ப்பு மற்றும் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகளுக்கு காரண மாகிறது. இதன் பண்புகள் நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும் உதவுகிறது.

கொடுக்காய் புளியில் உள்ள கால்சியம் எலும்புகளின் ஆரோக் கியத்தை மேம்படுத்த உதவுகிறது. அதே நேரத்தில் இதன் இலைகளில் தசையை தளர்த்தும் செயல்பாடு உள்ளது. இதனால் வலி மற்றும் தசைகளின் விறைப்பை எளிதாக்க இது உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வைட்டமின் நி இதில் நிறைந்துள்ளன. இவை பல்வேறு நோய்களிலிருந்து தற்காத்து கொள்ள, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

கொடுக்காய் புளி உடலில் உள்ள மொத்த சீரம் மற்றும் மோசமான கொழுப்பின் அளவைக் குறைக்க

உதவுகிறது. அதே நேரத்தில் அதன் ஹைப்பர்லிபிடெமிக் எதிர்ப்பு செயல்பாடு காரணமாக நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கிறது. மேலும், இதிலுள்ள ஆக்ஸிஜனேற்ற பண்புகள் இதயத்தை ஆக்ஸிஜனேற்ற அழுத்த பிரச்சனைகளிருந்து பாதுகாக்க உதவுகின்றன.

கொடுக்காய் புளியில் வயிற்றின் தசைகளை தளர்த்துவதன் மூலமும், ஆற்றலை வழங்குவதன் மூலமும், பாக்டீரியாக்களின் வளர்ச்சியைத் தடுப்பதன் மூலமும் வயிற்றுப்போக்கு பிரச்சனையை சரிசெய்ய இது உதவுகிறது.

இதன் முற்றிய காய்கள் பச்சை நிறத்திலும் சாப்பிடுவதற்கு துவர்ப்பு சுவையிலும், பழம் அடர் சிவப்பு நிறத்திலும் சாப்பிடுவதற்கு இனிப்பு கலந்த துவர்ப்பு சுவையுடனும் இருக்கும்.

மனிதன் எதையும் போகிற போக்கில் உண்ண பழகவில்லை. எல்லாவற்றிலும் ஏதோ ஒரு மருத்துவ குணம் மறைந்திருக்கும். அப்படி இந்த கொடுக்காய்ப்புளியை உண்பதால் என்ன மருத்துவகுணம் உள்ளது என்பதை விளக்குகிறார் அரசு சித்த மருத்துவர் வி.விக்ரம் குமார்.

"மனிதர்கள் பெரும்பாலும் இனிப்பு, காரம் போன்ற சுவைகளையே பெரிதும் விரும்புகின்றனர். துவர்ப்பு சுவையை யாரும் பெரிதும் விரும்புவதில்லை. கொடுக்காய்ப் புளி துவர்ப்பு சுவை மிகுந்த உணவுப்பொருள்களில் ஒன்று. இப்படி ஒரு பழம் இருப்பதுகூட பலருக்கு தெரியாது.

இந்த கொடுக்காய்ப்புளியில் துவர்ப்பு சுவை நிறைந்து இருப்பதால் இவற்றை சாப்பிடும் போது வாய்ப்புண், வயிற்றுப் புண் போன்றவை குணமாகும். தற்போது உள்ள உணவியல் முறையால் ஏற்படக் கூடிய அல்சர் மற்றும் செரிமான மண்டலங்களில் ஏற்படக்கூடிய சிராய்வுகள் போன்றவற்றையும் சரிசெய்யும் பண்பு இந்த கொடுக்காய்ப் புளிக்கு உள்ளது. கொடுக்காய்ப்புளியை பழமாக உண்பதைவிட பிஞ்சாக இருக்கும் போது உண்டால் நல்லது. அப்போது அதில் அதிகளவு துவர்ப்பு சுவை இருக்கும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் பெரும்பாலும் பழங்கள் எடுத்துக் கொள்வதை தவிர்ப்பார்கள். ஆனால் இந்த கொடுக்காய்ப்புளியில் துவர்ப்பு சுவை அதிகம் உள்ளதால் நீரிழிவு நோய் உள்ளவர்களும் இதை தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் கை, கால் வீக்கம், புண் போன்றவற்றையும் இவை குணப்படுத்தும்.

கொடுக்காய்ப்புளியை சாப்பிடும் போது தொண்டை அடைப்பது போன்று இருக்கும். எனவே குழந்தைகளுக்கு கொடுக்கும்போது அவற்றை இடித்து பனைவெல்லம் அல்லது நாட்டுச் சர்க்கரையுடன் தண்ணீர் சேர்த்து கொடுக்கலாம்" கர்ப்பிணிப்பெண்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுத்தான் சாப்பிடவேண்டும்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

●

பாதயாத்திரை

ராமகிருஷ்ண ஜி. கோத்தாரி 1908 இல் பிறந்தார். அவர் ஒரு பதாரே பிரபு சாதியைச் சேர்ந்தவர். அவரது பெற்றோர் முதன்முதலில் சீரடிக்கு 1911 இல் விஜயம் செய்தனர். அந்த வருகையின் போது, துவாரகாமாயின் தாழ்வாரத்தில் நின்று பாபா பக்தர் களுக்கு உதி வழங்குவதைக் கண்டனர். அவர்கள் பக்தியால் நிறைந்து, இந்த அழகிய காட்சியைக் கண்டு வியந்து பார்த்து ரசித்தனர்.

பின்பு பாபாவின் புகைப்படத்தை வாங்கிக்கொண்டு வீடு திரும்பிய அவர்கள் அதில் இருந்துபாபாவை வணங்கத் தொடங்கினர். அவர்கள் பாபாவின் படத்தினை அலங்கரித்து வைத்து பூஜைகள், பஜனைகள் செய்யத் தொடங்கினர்,மேலும் அவர்களது பஜன் மண்டலிக்கு "சாய் லாஜ்" என்று பெயரிட்டனர்.



1913 இல் ராமகிருஷ்ணரின் தந்தை நிமோனியாவால் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளித்து வந்த டாக்டர் நாயக் அவர் குணமடைவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று அவரது குடும்பத்தினரிடம் கூறினார். இதைக் கேட்ட ராமகிருஷ்ணரின் தாயார் பாபாவிடம் பிரார்த்தனை செய்து, தனது கணவர் உயிர் பிழைத்தால், சீரடிக்கு பாதயாத்திரையாக வந்து நன்றி தெரிவிப்பதாக சபதம் செய்தார்.

இரவு முழுவதும் பஜனைகளைச் செய்ய பஜனை மண்டலியைச் சேர்ந்தவர்களும் அவரது வீட்டிற்கு வந்தனர். தொடர்ந்து பஜனை நடந்து கொண்டிருந்தது. ஆனாலும் இரவு நேரத்தில் அவரது நோய் தீவிரமடைந்து, இரவு 10 மணிக்கு மருத்துவரை மீண்டும் வரவழைத்தனர். அவர்



நோயாளிக்கு ஊசி மற்றும் மருந்துகளை வழங்கினார், ஆனால் நள்ளிரவில் கணவர் இறந்துவிடுவார் என்று மனைவியிடம் கூறினார். இதைக் கேட்ட உறவினர்கள், நோயாளிக்கு பகவத் கீதையை வாசித்தனர். அதே நேரத்தில், பாபாவின் பஜனைகளும் தொடர்ந்தன.

இரவு 11 மணியளவில், நோயாளி மூச்சு விடுவதில் மிகுந்த சிரமப்பட்டார். அவரது நிலையைக் கண்டு மனமுடைந்த மனைவி, "பாபா, என் கணவரைக் காப்பாற்றுங்கள்" என்று கதறினார். நெருக்கடி அதிகாலை 1 மணி வரை நீடித்தது. மருத்துவர் மீண்டும் அழைக்கப்பட்டபோது. மீண்டும் ஒருமுறை அவர் நோயாளிக்கு ஊசி போட்டார், பின்பு மருத்துவரே அதிசயிக்கும்படி அவர் பிழைத்துக்கொண்டதாக அறிவித்தார்.

பஜனைகள் அதிகாலை 4 மணி வரை தொடர்ந்தன. பஜனை பாடகர்களும் உறவினர்களும் கணவர் உயிர் பிழைத்ததாக மனைவிக்கு உறுதியளித்தனர், எனவே அவர் தனது சபதத்தின்படி பாதயாத்திரைக்குத் தயாராக வேண்டும். அந்த நேரத்திலிருந்து நோயாளி சீராக குணமடைந்து பரிபூரணமாக குணமடைந்தார்.

உடனே பாபாவிடம் பிரார்த்தனை செய்தபடி, குடும்பத்தினரும் பஜன மண்டலியும் சீரடிக்குப் புறப்பட்டனர். கோபர்கானில், குடும்பத்தினர் சீரடிக்கு அழைத்துச் செல்ல ஐந்து மாட்டு வண்டிகளை வாடகைக்கு எடுத்தனர், ஆனால் மனைவி வண்டியில் அமரவில்லை. அவளது கால்கள் வீங்கி காயப்பட்டிருந்தாலும் தனது பிரார்த்தனையின்படி வண்டிகளுக்குப் பின்னால் நடந்தே சென்றாள்.

சீரடியிலிருந்து சிறிது தூரத்தில் ஒரு கல் மற்றும் முள்ளான பாதை இருந்தது, எனவே அவர் சென்று ஒரு மரத்தின் கீழ் ஓய்வெடுத்தார். மேய்ப்பன் உடையில் வெள்ளை தாடியுடன் ஒரு மனிதனை அவள் கவனித்தாள். அவர் அவளை அணுகி, "உங்கள் சபதத்தை பாபா ஏற்றுக் கொண்டார், எனவே மீதமுள்ள தூரத்தை மாட்டு வண்டியில் செல்லுங்கள்" என்று கூறினார்.

அந்தப் பெண்மணி அவரது குரலில் அன்பான தொனியைக் கேட்டார், ஆனால் அவள் தனது சபதத்தை ஏற்றுக்கொண்டு மீதமுள்ள வழி முழுக்க நடந்தே சென்றார். அவள் துவாரகாமாயியை அடைந்ததும், பாபா தனது பக்தர்களுடன் அங்கே அமர்ந்திருந்தார். அவர் நானா சாஹேப்பிடம், "நான் இந்தப் பெண்ணை வழியில் சந்தித்து வண்டியில் ஏறச் சொன்னேன், ஆனால் அவள் கேட்கவில்லை. அவளுடைய கால்கள் எவ்வளவு வீங்கி, சிராய்ப்புற்றிருக்கின்றன என்று பாருங்கள்! ஆனால் அவை மாலைக்குள் சரியாகிவிடும்" என்றார்.

அவர் சொன்னபடி, மாலைக்குள் வீக்கம் மற்றும் சிராய்ப்பு மறைந்துவிட்டது அவர்கள் அனைவரும் சீரடியில் சில நாட்கள் தங்கி, உதி மற்றும் பாபாவின் ஆசீர்வாதங்களுடன் வீடு திரும்பினர். கொண்டவை ராக்கியத்தின்படி ராமகிருஷ்ணனின் தாயார் தனது பாதயாத்திரையை நிறைவு செய்தார். ●

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால் காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: **9941816692**

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி. தேனிஷா ரகுபதிராஜா, ரியா, லோகன், கனடா, ரூ.5000.
திரு. கருணாநிதி குடும்பத்தார். வில்லிவாக்கம். ரூ.3500.
திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர். ரூ.3000.
திருமதி. ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி. மாலினி கணேஷ், சென்னை. ரூ.1500.
திருமதி. அர்ச்சனா சாய், OMR, ரூ.1008.
திரு. கௌரி சங்கர், வேளச்சேரி, ரூ.1001.
திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.
திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திரு. சாய்குமார் குடும்பத்தார். அயனாவரம். ரூ.700.
திருமதி.வித்யா நவீன்குமார். பெங்களூர். ரூ.500.
திருமதி. சுகன்யா துரைராஜ்,சென்னை. ரூ.500.
திருமதி. நித்யா ராஜேந்திரன், சென்னை. ரூ.500.
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.500.
திருமதி.பி. மகாலட்சுமி.மதுரை. ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திருமதி.ஜானகி சீனிவாசன். தாம்பரம். ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. வெங்கடாசலம், டி.நகர். ரூ.500.
திருமதி.டில்லிராணி,பழையசீவரம். ரூ.500.
திரு. மாணிக்கவேல், பழையசீவரம். ரூ.500.
திரு. ஆனந்த் சாந்தகுமாரி. பழையசீவரம். ரூ. 500.
திரு. கோபாலசாய், விருகம்பாக்கம், ரூ.400
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. உமா விஜய்ஆனந், அயனாவரம். ரூ.400.
திரு. வெங்கடேஷ் பிரசாத், கோவை.ரூ.300.
திரு. வி.எம்.ஷ்யாம் ருதை, வி.எம்.பூஜாஸ்ரீ, அயனாவரம். ரூ.300.
திருமதி.அனிதா, திருப்பூர், ரூ.200.
திரு.ஸ்ரீராம் வெங்கட்ராமன், பெங்களூர். ரூ.200.
திருமதி.வி.எம்.ஜெயந்தி விநாயகமூர்த்தி, அயனாவரம். ரூ.200.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.202.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.200.
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.200.
திரு. சாந்தமூர்த்தி,போரூர். ரூ.200.
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திருமதி. உமா, அயனாவரம். ரூ.200.
திருமதி.பிரியா, அயனாவரம். ரூ.100.
திருமதி. தமிழரசி, அயனாவரம். ரூ.100.
திரு. பலராமன் அயனாவரம். ரூ.100.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ–1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும்
அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும்
என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.



எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068